விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 01 திங்கட்கிழமை (17.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 273

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## கிழக்கு மாகாண கூட்டாட்சி; சம்பந்தன்-ஹக்கீம் திடீர் சந்திப்பு

### முடிவுகள் எட்டப்படாமல் முடிந்தது



கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைப்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் நேற்றுக் காலை கொழும்பு பாக் வீதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் திடீர் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பிற்கு த. தே. கூட்டமைப்பின் சார்பில் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் தலைமை தாங்கினர். (20ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய அரசுக்கு ஐ.தே.க நிபந்தனை

கிழக்கு மாகாணத்தில் அனைத்துக் கட்சிகளும் பங்குபெறும் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் நாட்டின் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சில நிபந்தனைகளை விதித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று அக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் ஜயலத் ஜெயவர்த்தன உள்ளிட்ட குழுவினர் நடத்திய ஊடக வியலாளர் மாநாட்டில் இதனைக் குறிப்பிட்டனர்.

தேர்தல் காலத்தைக் கடத்தாமல் அரசாங்கம் வடக்கு மாகாண சபைத் தேர்தல் எப்போது நடத்தப்படும் என்பதை தெளிவாக அறிவிக்க வேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறை மற்றும் அவற்றுக்கான காலஎல்லை தொடர்பில் அரசாங்கம் அறிவிக்க வேண்டும்.

நாட்டின் இனப்பிரச்சினை தீர்வுக்காக நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைப்பது தொடர்பிலும் அதன் நிகழ்ச்சிநிரல் மற்றும் அவற்றுக்கான கால எல்லை தொடர்பிலும் அரசாங்கம் வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும். (20ஆம் பக்கம் பார்க்க)

## மக்களை ஏமாற்றும் மின்சாரம்!

யாழ்.மாவட்டத்தில் அடிக்கடி தடைப்படும் மின்சாரத்தால் பொதுமக்கள் பெரிதும் மன வேதனை அடைந்துள்ளனர்.

வீதி அகலிப்புக்காக மின்சாரம் தடைப்படும் என்ற அறிவித்தலுடன் பகல் வேளைகளில் மின் தடை மேற்கொள்ளப்படுகிறது.

அதற்கென காலை 8.30 மணிக்கு மின்சாரம் தடைப்பட்டுப் போகும்.

மாலையில் 6 மணிக்கு மின்சார சபை ஊழியர்கள் கடமைகளை நிறைவுசெய்து விட்டு வீடுகளுக்குச் சென்றுவிடுவார்கள். ஆனால் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் மனு

இலங்கை போர்க் குற்றங்கள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்த வேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன்றத்தில் பணியாற்றும் அ.தி.மு.க வழக்கறிஞர்கள் குழு டில்லியில் உள்ள சர்வதேச நீதிமன்ற நீதிபதியான தல்வீர் பண்டாரியிடம் நேற்று மனு அளித்துள்ளனர்.

செப்ரெம்பர் 20ஆம் திகதி இந்தியாவுக்கு ஜனாதிபதி மகிந்த செல்லவுள்ளார்.

இந்த நிலையில் உச்சநீதிமன்றத்தில் பணியாற்றும் அதிமுக வழக்கறிஞர்கள் குழு டில்லியில் உள்ள சர்வதேச நீதிமன்ற நீதிபதியான தல்வீர் பண்டாரியிடம் நேற்று மனு அளித்துள்ளனர்.

இந்த மனுவில் இலங்கை போர்க் குற்றங்கள் தொடர்பாக இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச நீதிமன்ற நீதிபதியிடம் அரசியல் கட்சி ஒன்றுஇத்தகைய மனு கொடுப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## இந்தியாவில் பலத்த பாதுகாப்பு

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தை முன்னிட்டு அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அவர் விஜயம் செய்யவுள்ள புதுடில்லி மற்றும் சாஞ்சி பகுதிகளின் பாதுகாப்புக்களை இந்தியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் உறுதிப்படுத்தியுள்ளது. இலங்கையின் இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 19-ம் திகதி புதன்கிழமை இந்தியா செல்கிறார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழகத்தின் பல அரசியல் கட்சிகள் அன்றைய தினம் ஆர்ப்பாட்டங்களை நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.(எ-11)

## இலங்கை அழைத்தே ஐ.நா. குழு வந்தது!

### பாலித ஹோகன தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு விஜயத்தினை மேற்கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித ஹோகன தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கிலிருந்து இலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஐ.நாவிலிருந்து குழுவொன்றை அனுப்பி வைக்குமாறு இலங்கை அரசாங்கம், மனித உரிமை (19ஆம் பக்கம் பார்க்க)

## முதலமைச்சர் தெரிவு விவகாரம் நிறைவேற்றுக் குழுவிடம் ஒப்படைப்பு

### ஜனாதிபதி விலகிக் கொண்டார்

(கொழும்பு)

முதலமைச்சர் மற்றும் அமைச்சர் தெரிவுகளிலிருந்து ஜனாதிபதி விலகிக் கொண்டுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபை மற்றும் வட மத்திய மாகாண சபைகளுக்கான முதலமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர்களை தெரியும் பொறுப்பினை ஜனாதிபதி சிறிலங்கா சுதந்திரக் கட்சி நிறைவேற்றுக் குழுவிடம் ஒப்படைத்துள்ளார்.

இதன்படி, கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான நிமால் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன, டலஸ் அழகப்பெரும, பசில் ராஜபக்ஷ அநுரபிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த ஆகியோரிடம் முதலமைச்சர், அமைச்சர் தெரிவுகளை மேற்கொள்ளும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் இடம்பெற்ற காலத்தில் வன்முறைகளில் ஈடுபட்டவர்களுக்கு பதவிகளை வழங்க வேண்டாம் என ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## வேலணையில் மற்றொரு சடலம்

(வேலணை)

யாழ்.வேலணை, மண்கும்பான் கடற்பரப்பில் உருக்குலைந்த நிலையில் மேலும் ஒரு ஆணின் சடலம் நேற்றுக் காலை கரையொதுங்கியிருப்பதாக பிரதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை குறித்த பகுதியில் உருக்குலைந்த நிலையில் ஆணொருவரின் சடலம் கரையொதுங்கியிருந்த நிலையில் நேற்று ஞாயிறு காலை மற்றொரு சடலமும் கரையொதுங்கியிருக்கின்றது. (19ஆம் பக்கம் பார்க்க)

## 'இந்தியாவுடன் யுத்தம் செய்வேன்'

### எச்சரித்தாராம் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ

(புதுடில்லி)

இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையிலிருந்து வெளியேறாவிட்டால் இந்தியாவுடன் யுத்தம் ஏற்படும் என 1989 ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ எச்சரித்ததாக இலங்கைக்கான முன்னாள் இந்திய உயர்ஸ்தானிகரான லகான்லால் மெஹ்ரோத்ரா தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் சஞ்சிகை ஒன்றிலேயே மெஹ்ரோத்ரா இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

1989ஆம் ஆண்டு ஜனாதிபதி பிரேமதாஸவை கொழும்பில் அவரின் அலுவலகத்தில் சந்தித்தபோது, இந்திய அமைதிகாக்கும் படையினரை வெளியேற்றுவதற்கு இந்தியா இணங்காவிட்டால் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளை இலங்கைப் படையினர் பொறுப்பேற்பதாக அரச தொலைக்காட்சியில் தான் அறிவிக்கப் போவதாக பிரேமதாஸ கூறினார்.

அதன்பின் இந்திய அமைதிகாக்கும் படையினர் ஆட்சேபித்தால் மோதலும் யுத்தமும் ஏற்படும் என ஜனாதிபதி பிரேமதாஸ கூறியதாக மெஹ்ரோத்தா தெரிவித்துள்ளார்.

மேதகு ஜனாதிபதி அவர்களே! நான் உங்களுடன் சமாதானம் பேச வந்துள்ளேன். ஆனால் உங்களுக்கு யுத்தம் வேண்டுமென்றால் நீங்கள் அதை (யுத்தத்தை) கொண்டிருக்கலாம் என தான் பதிலளித்ததாக மெஹ்ரோத்ரா கூறியுள்ளார்.

இந்த (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மு.கா. முடிபெடுப்பதில் உள்ள
# காலதாமதத்தை கண்டித்து அம்பாறையில் எழுச்சி மாநாடு

முஸ்லிம் காங்கிரஸ் முடிபினை எடுப்பதில் காலதாமதத்தை மேற்கொள்வதையும், அமைச்சுப் பதவிகளை மையப்படுத்தி பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதையும் கண்டித்து கிழக்கு மாகாண முஸ்லிம்களை ஒன்றிணைத்து எழுச்சி மாநாடொன்றினை அம்பாறை மாவட்டத்தில் நடத்துவதற்கு அக் கட்சியின் ஆதரவாளர்களில் ஒரு குழுவினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இக்குழுவினரின் ஏற்பாட்டாளர்கள் கருத்து தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்டத்தில் கரையோர மாவட்ட அதிகார அலகு, முஸ்லிம் முதலமைச்சர், காணிப் பிரச்சினைகள் போன்றவற்றிற்கு முன்னுரிமை அளித்து எழுத்து மூலமான உடன்படிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும் எனவும் தெரிவிக்கின்றார்கள்.

முஸ்லிம்கள் மு.காவுக்கு வாக்களித்ததன் நோக்கம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை பெற்றுக் கொள்ளவதற்காகவேயாகும். இதனை மறுதலித்து பதவிகளை மட்டும் கருத்தில் கொண்டு எடுக்கப்படும் முடிபுகள் முஸ்லிம் சமூகத்தை மேலும் சீரழித்துவிடும்.

எனவே முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தார்கள்.

இதேவேளை மு.கா. அரசாங்கத்தோடு இணைந்து கொள்வதற்கான வாய்ப்புக்களே அதிகம் காணப்படுவதாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த நஸீர் அகமட்டை முதலமைச்சர் பதவிக்கு ரவூப் ஹக்கீம் சிபார்சு செய் துள்ளதாகவும் மு.காவின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை முதலமைச்சர் பதவி விடயத்தில் மு.கா.வினரிடையே இழுபறி நிலை தோன்றியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

முதலமைச்சர் பதவி அம்பாறை மாவட்டத்திற்கு வழங்கப்படவேண்டுமென்று மு.காவின் அம்பாறைமாவட்ட உயர்பீட உறுப்பினர்கள்வலியுறுத்திக் கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

அம்பாறை மாவட்டத்தை திருப்திப்படுத்தாத முடிபுகள் கட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று பெயர் குறிப்பிட விரும்பாத உயர் பீட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (எ-11)

## ஐ.நா. குழு இன்று யாழ். விஜயம்

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இன்று யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்தின் ஆசிய பசுபிக், மத்திய கிழக்கு, வடஅமெரிக்க பிரிவுகளுக்குப் பொறுப்பான ஹன்னி மெகாலி மற்றும் சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகத் தெரிவுகளுக்கான மனித உரிமைகள் அதிகாரி ஒஸ்கார் சோலர்ஸ் இருவருமே யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

யாழ். மாவட்டத்துக்கு வருகை தரும் குழுவினர், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர். விஜயலக்சுமியை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து யாழிலுள்ள மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களையும் சந்தித்து போரின் பின்னரான நிலைமைகள் தொடர்பில் ஆராயவுள்ளனர்.

இதன் பின்னர் சாவகச்சேரியில் மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் மாலை 4.00 மணியளவில் கிளிநொச்சி செல்லும் ஐ.நா. குழுவினர் இறுதிக் கட்ட போர் நடைபெற்ற பகுதிகளுக்கும் செல்வர். மீளக்குடியமர்ந்துள்ள மக்களை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். (எ-11)

## இலங்கை படையினருக்கு தொடர்ந்து பயிற்சி

(சென்னை)

இலங்கையின் படைவீரர்களுக்கு தொடர்ந்தும் பயிற்சிகள் வழங்கப்படுவதாக இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் படையினருக்கு இந்தியாவில் பயிற்சிகள் வழங்கப்படக்கூடாது என்று தமிழக முதல்வர் உட்பட்ட கட்சித் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்ற நிலையில் இந்த அதிகாரியின் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவின் தென்பிராந்திய கட்டளைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ.கே. சிங் இதனை கூறியுள்ளார். இலங்கைப் படையினருக்கு இந்தியாவில் பல்வேறுபட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அவை இலங்கைப் படையினருக்கு பாரியளவில் உதவக் கூடியவகையில் மேற்கொள்ளப்படுவதாகவும் சிங் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய படைப்பயிற்சிகளுக்கு இலங்கையில் நல்ல மதிப்பு இருப்பதாக குறிப்பிட்ட அவர், அந்த நாட்டின் விமான மற்றும் கடற்படையினரும் பயிற்சிகளை பெற்று வருவதாக தெரிவித்துள்ளார். (எ-11)

## தேர்தல் பிரசார மேடைகளில் பேசியதை
# அமைச்சர் ஹக்கீம் மறக்கக் கூடாது!
## புத்திஜீவிகள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மூன்று மாகாணங்களுக்கான தேர்தல் நடைபெற்று முடிந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் யார் ஆட்சியமைப்பது? யாருடன் இணைந்துஆட்சியமைப்பது போன்ற வினாக்கள் தொடர்கின்றன. எனினும் பெரும் பாலும் தீர்மானிக்கும் சக்தியாக உள்ள மு.கா., த.தே.கூட்டமைப்புடனான இணைவை தவிர்த்து ஆளும் ஐ.ம.சு. கூட்டமைப்புடனேயே கிழக்கில் ஆட்சியமைக்கும் என்பது அனைவரும் அனுமானித்துள்ள விடயமாகும்.

இந்நிலையில் மு.கா. பெற்றுக்கொண்ட 7 ஆசனங்களும் அரசுக்கு எதிராகப் பெறப்பட்டவையே! இந்நிலையில் அரசோடு மு.கா. கூட்டிணைவது எவ்வளவு தூரம் சரியானது என்பது கேள்விக்குறியே!

கிழக்கில் தனித்துப் போட்டியிட்ட மு.கா. வின் தேர்தல் பிரசார மேடைகளில் அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் பேசிய பேச்சுக்கள் அரசுடனான இணைவை ஒருமுறை யோசிக்க வைக்கிறது என புத்திஜீவிகள் தெரிவித்துள்ளனர்.

அவரின் உரைகளின் பகுதிகள் வருமாறு,

**பாலமுனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்**

அரசு ஒரு பயங்கரவாதத்தை முடிபுக்கு கொண்டு வந்து தற்போது தேர்தல் எனும் பயங்கரவாதத்தை அரங்கேற்றிக் கொண்டு வருகிறது. இத்தேர்தல் நாட்டு மக்கள் விரும்பும் தேர்தல் அல்ல. இவ்வாறு முன்கூட்டி நடத்துவதன் ஊடாக நாட்டு மக்கள் தன்னோடு இருப்பதாக அரசு சர்வதேசத்துக்கு காட்ட முனைகிறது. அந்த வியூகம் தோல்வி அடையப் போகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் என்ற இயக்கத்தை இந்த அரசாங்கம் கணக்கில் எடுக்காமல் கடந்த ஒன்றரை வருட காலத்தில் நான் பட்ட அவஸ்தைகளுக்கு இத் தேர்தலின் மூலம் முடிபு கட்டலாம். எனவே சமூகத்தின் இருப்பையும் பலத்தையும் சர்வதேசத்திற்கு காட்டுவோம் என்றார்.

**காத்தான்குடியில்**

முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரை பெற்றுக் கொள்வதற்காகவே நாம் தனித்து போட்டியிடும் தீர்மானத்தை எடுத்தோம். கிழக்கில் எங்களுக்கு அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதை நாம் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

**பொத்துவில் அருகம்பே வீதியில்**

அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் பதவியில் நான் இருந்தும் எமது கட்சியை மாற்றான் தாய் மகனாகவே அரசாங்கம் கவனித்து வந்தது. மந்திரி பதவி ஒரு பொருட்டல்ல. அப்பதவி எனக்கு கடிவாளமுமல்ல.

முஸ்லிம் காங்கிரஸின் வெற்றியைத் தடை செய்து கிழக்கில் சிறுபான்மையினராக வாழும் சிங்கள சமூகத்தை வெளியுலகிற்கு சக்தியுள்ளதாக காட்டுவதே அரசாங்கத்தின் நோக்கம்.

அரசை விமர்சிக்கிறோம். எல்லையுடன் பேசுகிறோம். அரசு அதனை கணிக்க வேண்டும். அடாவடித்தனம் அச்சுறுத்தலால் மு.காவை அடக்கலாம் என்பது பகற்கனவு என்றார்.

**நிந்தவூர் பிரசாரக் கூட்டத்தில்**

13ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கு அமைய மாகாண சபைகளுக்கு வழங்கப் பட்டுள்ள அரசியல் அதிகாரத்தை அரசு மிகவும் மோசமாக கபளீகரம் செய்துள்ளது. நாடாளுமன்றத்தை கலைப்பது போன்று மாகாண சபையை ஜனாதிபதிக்கு கலைக்க முடியாது.

13வது அரசியல் யாப்பு சீர்திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை அரசு நினைத்தபடி எதனை யும் செய்வதற்கு அனுமதிக்கக்கூடாதென்ற கோட்பாட்டினை அரசு மீறியுள்ளது.

13வது திருத்தத்தை அமுல்படுத்தப் போவதாக உத்தரவாதம் வழங்கும் இவ்வரசு, கொடுத்த அதிகாரத்தினை மிகவும் மோசமாக பறிக்கும் முகமாக செயற்பட்டுள்ளது.

மு.கா. யாரிடமும் அடைமானம் வைக்கப்படுவதற்கோ சரணாகதி அரசியலை செய்வதற்காகவோ உருவாக்கப்படவில்லை என்றார்.

இவ்வாறு பல மேடைகளில் அரசுக்கு எதிராக பிரசாரம் செய்த மு.கா. தலைவர் , இன்று அரசுடன் இணைந்து ஆட்சியமைக்க நினைக்கின்றார். இது முற்றிலும் தவறானது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (எ-11)

## அவுஸ். செல்ல முயன்ற 52 பேர் கைதாகினர்

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்கு செல்ல முற்பட்ட 52 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நேற்று காலை 7 மணியளவில் காலி துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இவர்கள் அனைவரும் கடந்த மாதம் 26 ஆம் திகதி சிலாபத்திலிருந்து அவுஸ்திரேலியா நோக்கி தமது பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் பயணித்த படகு கோளாறிற்கு உட்பட்ட நிலையில் கடந்த 20 நாட்களாக நடுக்கடலில் தத்தளித்துள்ளனர். இந்நிலையில் இலங்கை கடற்படை யினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்

இவர்கள் 52 பேரும் மேலதிக விசா ரணைகளுக்காக காலி பொலிஸா ரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ-11)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்
இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு
ஜீவா, பூஜாஹெக்டே, நரேன் நடித்த



10.30, 2.30, 6.30, 9.30 D.T.S
(C-941)

**வான் விற்பனைக்கு**

வாகன இல. 58-xxxx,
ஏலோவீல், டுவல் AC, 4 கதவு,
வென்ஸ் மொடெல்.
தொடர்புகளுக்கு:
0771176689
(433)

**பரிசுத்த ஆவிக்கு செபம்**

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திரு நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக் கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

– அடியான்
(401)


**மரண அறிவித்தல்**

## கதிரன் கந்தையா
(மாப்பிளைக் கந்தையா)



உடுவிலைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கு துரைவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரன் (மாப்ளைக் கந்தையா) அவர்கள் 15.09.2012 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் கதிரன் லட்சுமியின் அன்பு மகனும், சின்னாட்சியின் பாசமிகு கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17.09.2012 இன்று திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளைகள்
இணுவில் தெற்கு, துரை வீதி (436)

**மரண அறிவித்தல்**

## சுப்பையா தங்கராசா

புலோலி மேற்கு வாணர் குடியிருப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா தங்கராசா அவர்கள் நேற்று 16.09.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் குணபாலசிங்கம், தயாநிதி, சத்தியபாமா, சந்திரலீலா, பத்மநிதி, சிவநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: S. வரதன் ஐயா
அல்வாய் வடமேற்கு, திக்கம். (C-1073)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நட்பும் பகையும்

ஒரு பக்தன் காட்டிலே கடுமையான முறையில் தவம் புரிந்து கொண்டிருந்தான்.

கடவுள் அவனுக்கு முன்னால் வந்து காட்சி கொடுத்தார்; கையிலே கதாயுதம் வேறு வைத்திருந்தார்.

''பக்தா! உனது பக்தியை நான் மெச்சுகிறேன். உனக்கு என்ன வரம் வேண்டுமென கேள் தருகிறேன்'' என்றார் கடவுள்.

இப்படியாக கூறிய பின்னர் பக்தன் அமைதியாக இருப்பானா?

''பகவானே! என்னுடைய முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கிற சக்திகளை உன்னுடைய கதாயுதத்தாலே தாக்கி வீழ்த்தி அழித்து விடவேண்டும் ''இதுதான் எனது வேண்டுகோள்'' என்றார்.

பகவான் இதைக் கேட்டதும் புன்னகைத்தார்.

''அதற்கென்ன? அப்படியே செய்து விடுகிறேன்'' என்று சொல்லி விட்டு அப்படியே மறைந்தார்.

சற்றுநேரம் சென்ற பின்னர் ஆண்டவன் கையிலே இருந்த கதாயுதம் வேகமாக வந்து வரம் கேட்ட பக்தன் மார்பையே நோக்கித் தாக்க ஆரம்பித்தது. அவன் தடுமாறி கீழே விழுந்தான்.

''ஏன்டா வரம் கேட்டேன் வம்பாக போய்விட்டது'' என்று நினைத்தான்.

''ஐய்யய்யோ ஆண்டவனே! என்ன இது? என்னுடைய முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும் பகைவனைத்தான் தாக்கச் சொன்னேன். நீ ஞாபக மறதியாக ஏதாவது செய்து விட்டியா? உனது கதாயுதம் என்னையே வந்து தாக்குதே! குறி ஏதாவது தவறி விட்டதா'' என்று உரத்துக் கதற ஆரம்பித்தான்.

கடவுள் மறுபடியும் அவன் முன்னால் காட்சி கொடுத்தார். பக்தனைப் பார்த்து சொன்னார்.

''பக்தா! நீ கேட்டபடிதான் நான் ஆயுதத்தை வீசினேன். ஞாபக மறதி எதுவும் கிடையாது. குறிதவறி வந்து விழவில்லை சரியாகத்தான் வந்துள்ளது. மற்றவர்களை தாக்க வேண்டும், வீழ்த்தவேண்டும், அழிக்க வேண்டும் என நினைக்கிற உன் மனம்தான் எனக்கு பகைவன். எதிரியும் கூட . உன் முன்னேற்றம் அனைத்திற்கும் தடையாக இருக்கிறது நீயே தான். அதனாலே தான் இது உன்னையே வந்து தாக்கியுள்ளது என்று கடவுள் சொன்னார்.

இதிலே இருந்து நமக்கு எதிரியார்? என்பதை புரிந்துகொண்டோம் இல்லையா?

நமக்கு நண்பர்கள் யார்? என்பதை இப்போது நாம் பார்ப்போம்.

நமக்கு கிடைக்கும் நண்பர்களை மூன்று வகையாக பிரிக்கலாம். பனைமரம், தென்னை மரம், பாக்குமரம்.

பனைமரம் தானாக முளைக்கும், தண்ணீர் குடிக்கும், நமக்கு பலன் கொடுக்கும். நமக்கு வலிய வந்து உதவி செய்யும் நண்பர்கள் இந்த ரகத்தை சேர்ந்தவர்களாக இருப்பார்கள்.

தென்னை மரத்திற்கு எப்போதாவது தண்ணீர் பாய்ச்சினால் போதும் வளர்ந்து விடும்.

இது மாதிரி எப்போதாவது உதவி செய்தால் அதை ஞாபகம் வைத்திருந்து நமக்கு உதவி செய்யும் நண்பர்கள் தான் தென்னை மரத்தை ஒத்தவர்களாக இருப்பார்கள்.

பாக்கு மரத்திற்கு தினமும் தண்ணீர் விட்டால்தான் வளரும் பலன் கொடுக்கும்.

இதுமாதிரி தினமும் உதவி செய்தால் தான் நம்மை கவனிக்கும் நண்பர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் பாக்கு மரத்திற்கு ஒப்பானவர்கள்.

எனவே நாம் நண்பர்களை இந்த வகையிலே அடையாளம் கண்டு கொண்டு அதற்கு ஏற்ற வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

ஆனால் இந்த காலத்தின் கோலம் எப்படியென்றால்... நாம் நல்லது என நினைத்து ஒருவருக்கு உதவி செய்தால் துன்பத்திலே மாட்டிக்கொள்ளும் சந்தர்ப்பம் இடம்பெறுகின்றது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்க விசேட செயற்பாடுகள் முன்னெடுப்பு

## வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சைக்கு வடமாகாணத்திலிருந்து தோற்றும் மாணவர்களின் பெறுபேறுகளை உயர்வாக பெற்றுக் கொள்ளும் நோக்கில் பல விசேட செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தை சேர்ந்த பல மாணவர்கள் கடந்த காலங்களில் தேசிய மட்டத்தில் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளனர்.

அந்த நிலை மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும். தேசிய மட்டத்தில் மாணவர்களுடன் ஒப்பிடும் போது வடக்கு மாகாணத்தை சேர்ந்த மாணவர்கள் எந்தவிதத்திலும் சளைத்தவர்கள் இல்லை என்பதை நிரூபித்துக்காட்ட வேண்டும்.

அரசாங்கம் கல்வி விருத்திக்காக பல மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.வடக்கு மாகாணத்தில் பெரும்பான்மையான பாடசாலைகளின் பௌதீக வளங்கள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

பல திட்டங்கள் ஊடாக பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. பாரபட்சமின்றி இந்த அபிவிருத் திப் பணிகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

மேலும் எதிர்வரும் கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் கூடிய பெறுபேறுகளை பெற வேண்டும் என்பதற்காக விசேட பரீட்சைகளையும் செயற்றிட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றோம்.

எனவே வலயக்கல்வி , கோட்டக்கல்வி, அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை உயர்த்த அயராது பாடுபட வேண்டும். மீண்டும் வடக்கு மாகாணத்தின் கல்வி நிலை மேல்நிலையில் உள்ளது என்பதை நிரூபித்துக்காட்ட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# இலங்கையர்கள் 65 பேர் மண்டபம் அகதி முகாமில்

நடுக்கடலில் நாகை மீனவர்களால் மீட்கப்பட்ட இலங்கையை சேர்ந்த 65 பேர் பொலிஸ் விசாரணைக்கு பின் மண்டபம் அகதிகள் முகாமில் அடைக்கப்பட்டனர். இலங்கையிலிருந்து கடந்த மாதம் 24 ஆம் திகதி படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயன்று நடுக்கடலில் படகில் கோளாறு ஏற்பட்ட காரணத்தினால் 19 நாட்கள் உணவு, குடிநீர் இல்லாமல் இவர்கள் தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

இலங்கையை சேர்ந்த 65 பேரை நாகை மீனவர்கள் மீட்டு 13 ஆம் திகதி நள்ளிரவு நாகைக்கு அழைத்து வந்தனர். நாகையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அவர்களை பொலிஸார் தங்க வைத்திருந்தனர். அப்பகுதி மீனவர்கள் அவர்களுக்கு உணவு மற்றும் உடைகள் வழங்கினர். முறையான அனுமதி இல்லாமல் வந்ததாக வழக்கு பதிவு செய்து அவர்களை அகதிகளாக கருதி மண்டபம் அகதிகள் முகாமுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று அனுப்பி வைக்கப்பட்டனர். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 50 | 70 |
| உருளைக்கிழங்கு | 70 | 60-80 | 70 | 65 |
| பச்சைமிளகாய் | 45 | 60 | 60 | 70 |
| தக்காளி | 40 | 40 | 40 | 70 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 30 | 45 | 40 |
| கோவா | 50 | 60 | 60 | 60 |
| கரட் | 100 | 100 | 100 | 120 |
| பூசணி | 40 | 30 | 25 | 50 |
| புடோல் | 40 | 30 | 30 | 40 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 60 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 40 | 50 | 65 |
| பாகற்காய் | 50 | 60 | 60 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 70 | 65 | 90 |
| பயற்றங்காய் | 70 | 30 | 60 | 60 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 90 | 60 | 60 | 90 |
| முருங்கைக்காய் | 30 | 40 | 30 | 60 |
| போஞ்சி | 70 | 80 | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 15 | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 170 | 300 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 30 | 25 |

# இராசி பலன்

17.09.2012
(புரட்டாதி 01, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
பிரதமை காலை 7.06 மணிவரை
துதியை பின்னிரவு 5.16 மணிவரை
அத்தம் பின்னிரவு 2.23 மணிவரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவரை
சுபநேரம் 12.03-1.33 மணிவரை

**மேடம்**

கலகலப்பான செய்திகள் காலை நேரத்திலேயே வந்து சேரும் நாள், தேச நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள்.

**இடபம்**

மனமகிழ்ச்சியோடு செயற்படும் நாள், புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சிக்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர் பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள்.

**மிதுனம்**

நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களின் போது பிரபலமானவர்களின் தொடர்புகள் கிடைக்கலாம், செய்தொழிலில் மேன்மையடைவீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**கடகம்**

குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்ய முன்வருவீர்கள், பயணங்களால் பலன் கிடைக்கும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கலாம், கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள்.

**சிங்கம்**

உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், சுபசெய்திகள் இல்லம் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**கன்னி**

ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், விரும்பிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**துலாம்**

நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்க வேண்டிய நாள், செலவுகள் அதிகமாகும், வேலைச்சுமை அதிகரிக்கும், கூட்டாளிகளிடம் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை.

**விருச்சிகம்**

சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், அந்நிய தேச அனுகூலமுண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**தனுசு**

செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவார்கள், கொள்கைப்பிடிப்போடு செயற்படும் நாள்.

**மகரம்**

அரைகுறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், நிலபுலன்களால் ஆதாயமுண்டு, மருத்துவச் செலவுகள் குறையும்.

**கும்பம்**

நிதானத்தடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், சிறுவிரயங்கள் ஏற்படலாம்,தொழிலில் கூட்டாளிகள் விலகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, பொறுப்புகள் கூடும்.

**மீனம்**

நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறலாம், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், உறவினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி காண்பீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு மாதங்களாக வாகனக் கப்பல் வரவில்லை!

தற்போது வாகன இறக்குமதி 75 சதவீதத்தால் குறைந்துள்ள தாகவும், கடந்த 2 மாதங்களாக வாகனங்களை ஏற்றிய கப்பல் இலங்கைக்கு வரவில்லையென வும் சுங்கப் பிரிவுப் பணிப்பாளர் நாயகம் எஸ்.டி.எஸ்.குணதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் வாகன இறக்குமதிக்காக விதிக்கப்பட்ட வரி அதிகரிக்கப்பட்டதை அடுத்து இந்த வீழ்ச்சி காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

, அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பதால் ரூபாயின் மதிப் பைத் தக்க வைத்துக் கொள்வதற் காக அரசாங்கம், வாகன இறக்கு மதிக்கான வரியை அதிகரித்தது.

அரசாங்கத்தின் இந்தத் தீர்மா னம் தற்போது வெற்றி கண்டுள்ளது எனவும் குணதுங்க தெரிவித்தார்.

இதுகுறித்து கருத்துத் தெரி வித்த வாகன் இறக்குமதியாளர் சங்கத்தின் செயலாளார் கீர்த்தி குண வர்த்தன, வாகன இறக்குமதிக்கான வரி அதிகரிக்கப்பட்டதால் வாகனங் களுக்கான கேள்வி குறைந்துள்ள தாகவும், இதனால் குறித்த தொழில் துறையினர் பாரிய நெருக்கடிகளைச் சந்தித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் மாதாந்தம் சுமார் 3500 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டபோதிலும் வரி அதிகரிக் கப்பட்ட பின்னர் தற்போது மாதா ந்தம் சுமார் 100 வாகனங்கள் மாத்தி ரமே இறக்குமதி செய்யப்படுவதாக சுங்கப் பிரிவுப் பணிப்பாளர் நாயகம் குணதுங்க தெரிவித்துள்ளார்.

## ரத்மலானை விமான நிலையம் 'கொழும்பு சிற்றி' என மாற்றம்



ரத்மலானையில் அமைந்து ள்ள விமான நிலையத்தின் பெயர் கொழும்பு சிற்றி விமான நிலையம் எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

குறித்த விமான நிலையமானது இனிமேல் கொழும்பு சிற்றி விமான நிலையம் என அழைக்கப்படும் என விமான நிலைய முகாமை யாளர் சரத் டி சில்வா தெரிவித்தார்.

# சிறந்த பெறுபேறுகளால் உயர் பங்கிலாபம் வழங்கிடும் ஜனசக்தி

நடந்து முடிந்த 2012ஆம் ஆண் டின் அரையாண்டு காலப்பகுதியில் ஜனசக்தி காப்புறுதி பிஎல்சி நிறு வனம் மிகச் சிறந்த பெறுபேறுகளை வழங்கியுள்ளதுடன்; ஒவ்வொரு பங்கிற்கும் ஒரு ரூபாய் பங்குலா பத்தை அறிவித்துள்ளது.

காப்புறுதி என்பது நீண்டகால வணிகம். அத்துடன் எம்மிடம் உள்ள உயர்வான பங்கு மூலதனம் எமது வியாபரத்தை நிலையாகக் கொண்டு செல்வதற்கு வேண்டிய நலன் பங் காளர்கள் தொடர்பில் நாம் காட்டும் அர்ப்பணிப்பை இது உறுதி செய் கிறது என ஜனசக்தி முகாமைத்து வப் பணிப்பாளரான பிரகாஷ் சாப் டர் தெரிவித்தார்.

நிறுவனத்தின் மொத்த சொத் தின் பெறுமதி 13 பில்லியன் ரூபா யில் இருந்து 14 பில்லியன் ரூபா யாக அதிகரித்துள்ள அதேவேளை யில், 14 வீத வளர்ச்சி வீதத்தையும் மொத்த தவணைக் கொடுப்பனவாக 308 பில்லியன் ரூபாயையும் பதிவு செய்துள்ளது.

கடந்த நிதியாண்டில் ஜனசக்தி அதி சிறப்பாக செயற்பட்டுள்ளது.

கடந்த வருடத்தை விட தரமான சேவைகளையும் தயாரிப்புகளை யும் தனது பெறுமதி மிக்க வாடிக்கை யாளர்களுக்கு வழங்க வேண்டும் என்பதில் ஜனசக்தி உறுதியாக உள் ளது என்பதை இது எடுத்துக்காட்டு கிறது என்றார்.

# கெய்ன் லங்காவின் கூட்டு வர்த்தக மாநாடு




இலங்கையின் எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வாராய்ச் சிகளில் ஈடுபடும் கெய்ன் லங்கா தனி யார் நிறுவனம் கொழும் பில் கூட்டு வர்த்தகர் களுக்கான மாநாடொ ன்றை நடத்தியது.

எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வு அபி விருத்திபணிகளில் அவர்களையும் இணைத்துக்கொள்வதே இதன் நோக்கமாகும்.

எரிபொருள் அகழ்வாராய்ச்சிகள் உள்ளூர் தொழில்முனைவர்களுக்கும், நிறுவனங்களுக்கும் எத்தகைய நன்மைகளை வழங்கும் என்பது தொடர்பாக கவனம் செலுத்தும் நோக்கில் தாஜ் ஹோட்டலில் அண்மையில் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எண்ணெய் மற்றும் எரிவாயு தொடர்பான கலந்துரையாடல்களுக்கு அப்பால் இலங்கையில் கெய்ன் நிறுவனம் மேற்கொள்ளும் நடவடிக்கை கள் தொடர்பில் நிறுவனத்தின் அதிகாரிகளுடன் கலந்துரையாடும் வாய்ப் பும் உள்ளூர் வர்த்தகர்களுக்கு கிட்டியது.

அதுதவிர வர்த்தக ரீதியாக இணைந்து கொள்வதற்கான சந்தர் ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ள வும் இது வாய்ப்பாக அமைந்தது.

இலங்கையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள அகழ்வுப் பணிகள் தொடர்பில் கருத்தரங்கில் உள்ளூர் பிரதிநிதிகளுடன் கலந்து ரையாடப்பட்டது.

## மீண்டும் சிறந்த பெறுபேற்றைக் காட்டும் கொழும்பு பங்குச்சந்தை

பங்குச் சந்தை வர்த்தகத்தில் சிறந்த நிலைப்பாட்டை வெளிப் படுத்திய உலகின் 3-வது சிறந்த பங்குச் சந்தையாக கொழும்பு பங்குச் சந்தை தெரிவாகியுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 10-ம் திகதியிலிருந்து 4 வார காலத்திற்கு சிறந்த செயற்பாட்டினை வழங்கிய மைக்காக இவ் நாமத்தினை கொழு ம்பு பங்குச் சந்தை பெற்றுக் கொண் டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




# 160 புலமைப் பரிசில்களுக்கான தேடலை ஆரம்பித்தது செலிங்கோ

ஆயுள் காப்புறுதி முன்னோடி யான 'செலிங்கோ லைப்' நிறு வனத்தால் வருடாந்த 12-வது செலி ங்கோ லைவ் பிரணாம புலமைப் பரிசில்கள் வழங்கும் வைபவத்தின் போது அனைத்து மாவட்டங்களை யும் சேர்ந்த மாணவர்களின் மற் றும் இளைஞர், யுவதிகளுக்கென 8.3 மில்லியன் ரூபாய் திரட்டிய பெறுமதிமிக்க 160 வரையிலான புதிய புலமைப்பரிசில்கள் வழங்கப் படவுள்ளன.

கல்வித் துறைச் செயற்பாடு களுக்கென நிறுவன காப்பீடு ஒப்பந் தக்காரர்கள் விருது வழங்கும் நட வடிக்கை மூலம் 1461க்கு மேற்பட்ட எதிர்காலத் தலைவர்கள் பயன டைந்துள்ளனர்.

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தகுதியடைந்த மாணவர் களிடமிருந்து விண்ணப்பங்க ளைப் பெற்றுக்கொள்ள ஆரம்பித் திருப்பதாகவும் 2013-ம் ஆண்டு ஜனவரியில் நடைபெறவுள்ள புல மைப்பரிசில்கள் வழங்குதலுக் கான விண்ணப்பங்கள் 30.11.2012-ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்பட வுள்ளதாகவும் செலிங்கோ லைஃப் நிறுவனம் அறிவித்துள்ளது.

5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைகளில் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுவரும் அந்தந்த மாவட்டங் களைச் சேர்ந்த காப்பீடு ஒப்பந் ததாரர்களின் பிள்ளைகளுக்கு அல்லது விளையாட்டு, நாடகம் மற்றும் கண்டுபிடிப்பு ஆகிய துறைகளில் தேசிய அல்லது சர்வ தேச மட்டத்தில் சாதனைகளை நிலைநாட்டுவோருக்கு செலி ங்கோ பிரணாம புலமைப்பரிசில் கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் க.பொ.த. உயர்தர பரீட்சைகளில் மாவட்ட மட்டத்தில் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களைப் பெற்றுக் கொள்ளும் காப்பீடு ஒப்பந்தக் காரர்களின் பிள்ளைகளுக்கு செலிங்கோ லைஃப் நிறுவனம் ரொக்கப்பண முடிச்சுக்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

# சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீட்டுக்கு இந்தியா அனுமதி

சில்லறை வர்த்தகத்தில் 51 சதவீதம் நேரடி அந்நிய முதலீட்டை அனுமதிப்பது என்று இந்திய மத் திய அமைச்சரவை கடந்த வாரம் அதிரடி முடிபு எடுத்துள்ளது.

சில்லறை வர்த்தகத்தில் நேரடி அந்நிய முதலீட்டை அனுமதிப்பது என்று கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் மத்திய அரசு முடிபு செய்தது. அப்போது இம் முடிபை கண்டித்து நாடு முழுவதும் பெரும் போராட்டங்கள் நடந்தன. இதை யடுத்து இவ்விவகாரம் அப்படியே கிடப்பில் போடப்பட்டது.

இந்நிலையில் தற்போது, மந்த மாகவுள்ள பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தும் ஒரு நடவடிக்கை யாக பல பில்லியன் டொலர் பெறு மதியான சில்லறை வணிகத்தில் பல்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வரும் பன்னாட்டு பெரு வணிக நிறு வனங்களுக்கு அனுமதி அளிக்க அமைச்சரவை முடிபு செய்துள் ளது.

இதன்மூலம் வால்-மார்ட், டெஸ் கோ, கேர்போர் போன்ற பன்னாட்டு பெருவணிக நிறுவனங்கள் உள் ளூர் நிறுவனங்களுடன் கூட்டாக கடைகளைத் திறந்து நுகர்வோ ருக்கு நேரடியாக பொருட்களை விற்க முடியும்.

இதுதவிர, வெளிநாட்டு விமான நிறுவனங்கள் இந்தியாவில் உள் ளூர் விமான நிறுவனங்களின் 49 வீதமான பங்குகளை வாங்குவதற் கான அனுமதியையும் இந்திய அமைச்சரவை வழங்கியுள்ளது.

இதேபோல் தகவல் ஒளிபரப்புத் துறையில் 74 சதவீதம் அந்நிய முத லீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள் ளது.

இதன்போது அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங் பேசுகையில், நாட்டில் மிகப் பெரிய சீர்திருத்தம் செய்வதற்கான நேரம் வந்துவிட்டது.

போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டிய நேரம் இது என்று கூறி னார்.

கூட்டத்திற்கு பின்னர் மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் ஆனந்த் சர்மா கூறு கையில்,

மத்திய அரசின் இந்தக் கொள்கை யை அமுல்படுத்தும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு அளிக்கப்படுகிறது.

51 சதவீதம் அந்நிய முதலீட்டை விரும்பாத மாநிலங்கள் இதை அமுல்படுத்த வேண்டியதில்லை.

சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிப்பதால் நாட்டில் வேலைவாய்ப்புகள் பெரு கும்.

விவசாயிகளின் விளைபொருட் களுக்கு உரிய விலை கிடைக்கும் என்பதால் அவர்களின் வாழ்வு செழிக்கும் என்றார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5496.85 | 5926.90 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5093.36 | 5588.19 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 2983.81 | 3214.35 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 10,252.213

உயர்வடைந்த பங்குகள்(ரூ) ஹேலீஸ் எம்ஜிரி (16.20), சிஜஎப்எல்(7.90), லங்கிம் சிலோன்(203.90), நந்தா பினான்ஸ்(9.10), தன்கொட்டுவ போஷல்(23.50).

சரிவுக்குட்பட்ட பங்குகள்(ரூ) பரஹறன்(1200.00), ஜனசக்தி இன்சுரன்ஸ்(11.60), ஆஸிரி சென்ரல்(240.00), அபான்ஸ் பினான்சியல்(41.20), [illegible] (2700.00)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# ஈரானின் எண்ணெய் உ/தி 40% சரிவு

ஈரானில் கச்சா எண்ணெய் உற்பத்தி 40 சதவீதம் குறைந்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்களை தயாரிப்பதாக அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகள் புகார் கூறிவரு கின்றன.

இதன் காரணமாக ஈரான் மீது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் பொருளாதார தடை விதித்துள்ளன. ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் குறைந்தளவில் ஈரானிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்துகொள்ள அமெரிக்கா அனுமதித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரி விக்டோரியா நூலண்ட் இது குறித்து கூறியதாவது, சர்வதேச நாடுகள் ஈரான் மீது வித்துள்ள பொரு ளாதார தடை காரணமாக அந்நாட்டின் எண்ணெய் உற்பத்தி 40 சதவீதம் குறைந்துள்ளது. இதன்மூலம் ஈரானுக்கு காலாண்டுக்கு ஒருலட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு விக்டோரியா நூலண்ட் கூறியுள்ளார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 130.45 | 133.37 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 210.40 | 216.12 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 168.80 | 174.12 |
| சுவிஸ் பிராங் | 138.61 | 143.65 |
| கனேடிய டொலர் | 134.07 | 138.69 |
| அவுஸ்திரேலிய டொலர் | 136.92 | 141.92 |
| சிங்கப்பூர் டொலர் | 105.99 | 109.49 |
| ஜப்பான் யென் | 1.67 | 1.73 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.37 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.88 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு சமூகங்களும் ஒன்றாக இணைய நல்லதோர் சந்தர்ப்பம்

## மு.கா.வுக்கு ஹசன் அலி அறிவுரை

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு வாக்களித்து வழங்கிய ஆணையை முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சு பதவிகள், வெளிநாட்டு தூதுவர் பதவிகள் மற்றும் ஏனைய சுகபோகங்களுக்காக அரசாங்கத்துடன் பேரம் பேசுவது முஸ்லிம் மக்களை இழிவுபடுத்தும் செயலாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மாந்துறை தொகுதியின் அமைப்பாளர் எம்.ஏ.ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து ஆட்சியமைப்பதற்காக நடத்திவரும் பேரம் பேசும் பேச்சுவார்த்தையை கண்டித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

முஸ்லிம் மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்பதற்காகவே கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு வாக்களித்து வெற்றியை ஈட்டிக் கொடுத்துள்ளனர்.

முஸ்லிம் மக்களின் இந்த புதிய ஆணை அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்கு அல்ல என்பதை மறந்து முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமையான கரையோர மாவட்டம், காணிகள் தொடர்பாக பிரச்சினை, இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு, வசதி குறைந்த மக்களின் சமூக நலத்திட்டங்கள் போன்றவற்றை கைவிட்டு தனிநபர்களுக்கான அமைச்சு பதவிகளுக்கும் சுகபோகங்களுக்கும் அரசாங்கத்திடம் பேரம் பேசுவது வேடிக்கையான விடயம்.

கடந்த காலத்தில் பிரிந்து போன இரண்டு சமூகங்கள் கசப்பான சம்பவங்களை மறந்து இணைந்து ஒன்றாக இந்த மாகாணத்தை ஆட்சி செய்யக்கூடிய காலம் ஏற்பட்டுள்ளது. அதனையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு அரசாங்கத்துடன் இணைந்து கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைப்பதானது இரு சமூகங்கள் மத்தியிலும் மீண்டும் பாரிய விரிசலை ஏற்படுத்துவதாகும்.

எனவே இவற்றை கருத்தில் கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் ஆக்கபூர்வமான முடிவுகளை எடுக்க வேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மாந்துறை தொகுதியின் அமைப்பாளர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பட்டாசு வெடித்ததில் ஐவர் படுகாயம்

(கொழும்பு)

தம்புள்ளை வீதியில் திவுள்கஸ்தோட்டை பிரதேசத்தில் பட்டாசுப் பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்ட வாகனத்தில் இருந்த பட்டாசுப் பொருட்கள் திடீரென வெடித்ததில் ஐவர் காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்று நண்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கலேவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-2)

Cambridge Management College

வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு French, Doutch, ஆகிய மொழிகளில் இலகுவாகப் பேச, எழுத, வாசிக்க, கற்பிக்கப் படுகின்றன.
மற்றும் IELTS, English, IT, Sinhala கற்க விரும்புவர்களுக்கான பிரதியேக வகுப்புகளும் நடைபெறுகின்றன.
6-13 வயது வரையான சிறுவர் சிறுமியர்களுக்கு ICT, English வகுப்புகளும் நடைபெறுகின்றன.

Cambridge Management College
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், [கச்சேரி பஸ்நிலையம் அருகில்]
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com

# சர்ச்சைக்குரிய சீபா கைச்சாத்திடப்படும்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் சர்ச்சைக்குரிய சீபா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூர் வர்த்தக சமூகத்தின் கடுமையான எதிர்ப்பையும் பொருட்படுத்தாது அரசாங்கம் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீபா உடன்படிக்கை நிச்சயமாக கைச்சாத்திடப்படும் எனவும் எனினும் அவசர அவசரமாக உடன்படிக்கையில் கைச்சாத்திடும் திட்டம் கிடையாது.

ஒப்பந்தம் தொடர்பில் சில உள்ளூர் வர்த் தகர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். ஏதேச்சாதிகாரமான தீர்மானங்களை எடுக்க முடியாது எனவும் பல்வேறு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடாத்தி இறுதித் தீர்மானம் எட்டப்படும்.

சீபா உடன்படிக்கையின் நன்மை தீமைகள் தொடர்பில் தொடர்ந்து ஆராயப்பட்டு வருகிறது. இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக உடன்படிக்கை தொடர்பான சகல விடயங்களையும் பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்துவது உசிதமாகாது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கை அதிகாரிகள் எவரையும் நம்பமுடியாது

## ரொபேர் ஓ பிளேக் கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல்

இலங்கையின் அதிகாரிகள் எவரையும் நம்ப முடியாது என்று தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் ரொபேட் ஓ பிளேக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த செய்தியை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகளான ஹோம்ஸ் மற்றும் பெஸ்கோ ஆகியோர் இலங்கை தலைவர்களுடனும் அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

இதன்போது இலங்கையின் சார்பில் எவருமே நம்பி செயற்படும் அளவில் நடந்து கொள்ளவில்லை என்று ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் ரொபேட் ஓ பிளேக்கிடம் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் இலங்கை அதிகாரிகள் உரிய தரவுகளை வழங்கவில்லை என்று ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் பிளேக்கிடம் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் இலங்கை அரசாங்கம் எவ்வித ஆக்கபூர்வமான செயற்பாட்டையும் கொண்டிருக்கவில்லை.

அத்துடன் தமிழர்கள் என்ற பெயரை பயன்படுத்தி சிங்கள தேசியவாதிகளின் வாக்குகளை கவரும் நடவடிக்கையிலேயே இலங்கை இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக ரொபேட் ஓ பிளேக் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துக்கு அறிவித்துள்ளார்.

இதன் கட்டங்களாகவே மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் எதிர்க்கட்சிகளை வலுவிழக்கச் செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாகவும் பிளேக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

மின்சாரம் தடைப்படுவதால் ஏற்படும் நட்டத்தை இல்லாதொழிக்க...
4050 க்கும் மேற்பட்ட மின்பிறப்பாக்கிகள் இலங்கையில் பயன்பாட்டிலுள்ளன
MACK POWER
கிர்லோஸ்கார் மின்சார பிறப்பாக்கி



குறைந்தபட்ச செலவு
இலகுவாக பராமரித்தல்
விருப்பத்திற்கு ஏற்ப AMF/AD வசதிகள்
ரூபா 595,000 முதல்....
உடன் அழையுங்கள் 071-4269470 077-7563453
சிறந்த முகாமைத்துவ தொகுதிக்காக ISO 9001 சான்றிதழ்
சுற்றாடல் முகாமைத்துவ தொகுதிக்காக ISO 14001 சான்றிதழ்
US Tire I/II நியமத்தின் பிரகாரம் வெளியேற்றல்
மெக்ஸ்வுட்ஸ் எனர்ஜி பீஎல்சீ
10,ஞானார்த்த பிரதீப மாவத்தை, கொழும்பு-08
தொலைபேசி: 011-2691186, தொலைநகல்: 011-2699454
இணையம்: me@mackwoods.com
மின்னஞ்சல்: www.mackwoods.com
(இ/1071)

## கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1984 இந்து<br>நட்சத்திரம்:-பூசம் 2<br>உயரம்:- 5'4"<br>கி.பா:-20.75, 2 இல் செவ்.<br>தொழில்:- பிரான்ஸ் P.R. B/425 | பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அத்தம் 3<br>உயரம்: 5'6"<br>கி.பா:-80, 1 இல் செவ்.<br>தொழில்:-BBA, LLB அரச உதவிச் செயலர் G/452 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மகம் 2<br>உயரம்:- 5'6"<br>கி.பா:-28.25<br>தொழில்:-லண்டன் ஸ்ருடன் விசா B/426 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- உத்தரம் 2<br>உயரம்: 5'6"<br>கி.பா:-49<br>தொழில்:-A/L G/462 |
| பிறப்பு:-1979 இந்து<br>நட்சத்திரம்:-மூலம் 2<br>உயரம்:-5'6"<br>கி.பா:-41.50, 7இல் செவ்.<br>தொழில்:-நோர்வே P.R. இல்லை B/427 | பிறப்பு:- 1990 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 2<br>உயரம்: 5'2"<br>கி.பா.: 34.75, 1 இல் செவ்.<br>தொழில்:-G.A.Q. மாணவி G/472 |
| பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அச்சுவினி 1<br>உயரம்:-5'8"<br>கி.பா:-67, 8 இல் செவ்.<br>தொழில்:- எலக்ரோனிக் இன்ஜினியர் அவுஸ். P.R B/394 | பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- திருவாதிரை<br>கி.பா.:- 41.75<br>தொழில்:-BBA நிகழ்ச்சி திட்ட அதிகாரி G/475 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்முறைகள் குறித்து கலந்துரையாடல்

(கரவெட்டி)

WOMEN IN NEED அமைப்பினால் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான கருத்துப் பரிமாற்றங்களும் பரிகாரங்களும் நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணி வரை கரவெட்டி பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ள பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைக் குறைக்கும் நோக்கத்துடன் சமூக மட்ட தலைவர்களுடன் கலந்துரையாடப்படவுள்ளது.

இதில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கரவெட்டி ஆகிய பிரதேசங்களை சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சமூகத்தில் பொறுப்பு வாய்ந்த செயற்பாட்டுத் திறன் மிக்க ஆர்வமுள்ள உறுப்பினர்கள் கலந்து கொள்ளுமாறும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (அ-3-24)

## புகைப்பட கலையகத்தில் நேற்று முன்தினம் திருட்டு




(யாழ்ப்பாணம்)

அரியாலை மாம்பழம் சந்தியில் உள்ள ஸ்ரூடியோ நிலையத்திற்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் சாதனங்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக ஸ்ரூடியோ உரிமையாளர் தெரிவிக்கையில்,

நிலையத்தின் ஓட்டினைப் பிரித்து உள் நுழைந்த திருடர்கள் இலத்திரனியல் சாதனங்களைத் திருடிச் சென்றதோடு ஏனைய பொருட்களை சேதப்படுத்தியும் உள்ளனர் என கூறினார்.

இந்நிலையத்தில் ஏற்கனவே திருட்டுச் சம்பவம் ஒன்று கடந்த ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி இடம்பெற்றதாகவும் சம்பவத்தின் போதும் பல இலட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் சாதனங்கள் திருட்டுப் போனதாக குறித்த நிலையத்தின் உரிமையாளர் கண்ணீர் மல்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர் என யாழ்.பொலிஸார் தெரிவித்தனர். (அ-6)

## ஐந்து சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் சைக்கிள் திருடர்களிடம் இருந்து 5 சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி விக்கிரமராச்சி தெரிவித்தார்.

இதில் 65746838, 69911099, 56685272, V11759,9621639 என்ற இலக்கங்கள் கொண்ட சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் இவற்றில் 3 பெண்களினுடையது என்றும் 2 ஆண்களுடையது என்றும் அவர் தெரிவித்தார்.

இத்துவிச்சக்கரவண்டிகளின் உரிமையாளர்கள் தம்மிடம் உரிய ஆதாரத்தினைக்காட்டிப் பெற்றுக்கொள்ள முடியும் என்றார். (அ-4)

## வேகக்கட்டுப்பாட்டை இழந்த லொறி மரத்துடன் மோதியது

(கரவெட்டி)

சிறுப்பிட்டி பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த லொறி தென்னையுடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவது, கொழும்பில் இருந்து வடமராட்சி நோக்கி வேகமாக இராச வீதியூடாக வந்து கொண்டிருந்த லொறி சிறுப்பிட்டி நிலாவரை வீதியில் வீதி அகலமாக்கும் பணிக்காக வெட்டப்பட்ட பள்ளத்தில் விழுந்து அருகில் இருந்த தென்னை மரத்துடன் மோதி லொறியின் முன்பக்கம் பலத்த சேதம் அடைந்தது.

லொறியில் பயணித்த சாரதியும் நடத்துனரும் சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பினர். (அ-3-24)





## 6 கல்வி வலயங்களுக்கான பரிசளிப்பு விழா நிகழ்வு

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் பல் கலாசாரம் ஊடாக சமாதானம் என்ற தொனிப்பொருளில் பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட மாகாண மட்ட சுவரொட்டி, கவிதைக்கண்காட்சிக்கான இவ்வருட பரிசளிப்பு விழா எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யா/ வைத்தீஸ்வரா கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) க. கிருபாகரன் அறிவித்துள்ளார்.

இக்கண்காட்சியானது மடு, தீவகம், கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு வவுனியா வடக்கு ஆகிய 6 கல்வி வலயங்களை சேர்ந்த 60 பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்டு இறுதி நிகழ்வாகவே இடம்பெறவுள்ளது.

இக்கண்காட்சி பரிசளிப்பு விழாவிற்கு வருகைதரும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், தங்குமிட வசதிகள் தேவைப்படுவோர் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு முன்னர் இணைப்பாளர் செ.திருச்செல்வநாதனுடன் 0772719959 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-3-15)

## 12 சங்கீத ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கி வைப்பு



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பயனாக வடமாகாணத்திற்கென சங்கீத ஆசிரியர் 12 பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் வைத்து மேற்படி நியமனங்கள் கடந்த 14 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டன.

வடபகுதியைச் சேர்ந்த மேற்குறிப்பிட்ட 12 ஆசிரியர்களுக்கும் கிழக்கு மாகாணத்தில் நியமனம் கிடைத்த போதிலும் அங்கு தாம் கடமையாற்றுவதிலுள்ள இடர்பாடுகள் தொடர்பாகவும் அந்நியமனங்களை வடமாகாணத்திற்கு மாற்றித் தருமாறும் அமைச்சரிடம் கோரிக்கையினை முன்வைத்தனர்.

இந்நிலையில் கிழக்கு மாகாணத்தில் இவர்களுக்கான நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்த நிலையில் விசேட அமைச்சரவைப் பத்திரம் மூலம் வடமாகாணத்திற்கென புதிதாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் தீவகக் கல்வி வலயத்தின் பாடசாலைகளில் ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டுள்ளனர். நியமனப் பத்திரங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் (உதயன்), வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், யாழ்.மாநகர மேஜர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) உள்ளிட்டோர் வழங்கி வைத்தனர். (அ-9)

## தமிழர்கள் தமது வரலாற்றை ஆவணப்படுத்துவது அவசியமானது

### பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கருத்து

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் தமது வரலாற்றை, இருப்பை ஆவணப்படுத்துவதில்லை. இதனால் வரலாறு மறைக்கப்படுகின்றது என யாழ். பல்கலைக்கழக முன்னைநாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை கவலையுடன் தெரிவித்துள்ளார்.

**வேலணை ஒரு வரலாற்று அறிமுகம்** நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தலைமையுரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எமது நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் நூற்றாண்டு காலம் கட்டிக்காத்த கலாசாரம், பண்பாடு, சமூகக் கட்டமைப்பு எல்லாவற்றையும் சீரழித்து விட்டது.

முன்பு நாம் வாழ்ந்த வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். அது மட்டுமன்றி எமது வரலாற்றை ஆவணப்படுத்த வேண்டும். குறைந்த பட்சம் கிராமங்களையாவது ஆவணப்படுத்த வேண்டும்.

ஊர்ப் பற்றை பற்றி பேசுவதோடு மட்டும் நின்றுவிடாது எமது பிரதேச வரலாற்றை ஆவணப்படுத்தி அந்த பிரதேசங்களின் அபிவிருத்திகளுக்கு எம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்த நாவாந்துறைப் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை வசந்தபுரம் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 10 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை நித்தியஒளி சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை சூரியவெளியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது. (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டதாரிகளுக்கான

# நேர்முக தேர்வில் 200 பேர் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

2010/2011 ஆம் ஆண்டுகளில் பட்டம் பெற்றவர்களை பட்டதாரிப் பயிலுநர் நியமனத்திற்கு உள்வாங்குவதற்காக நேற்று முன்தினம் நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வில் 200 பேர் வரை தோற்றியிருந்தனர் என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

பட்டதாரிப் பயிலுநர்களுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பில் அரசாங்க பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் அறிவித்தலுக்கிணங்க குறித்த காலப்பகுதியில் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்து வெளியேறி ஏற்கனவே மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு தோற்றாதவர்களுக்கான நேர்முகப்பரீட்சை நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன்பிரகாரம் நேற்று முன்தினம் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி, கோப்பாய், சாவகச்சேரி, உடுவில், தெல்லிப் பழைப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த பட்டதாரிகள் 200 பேர் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நேர்முகத்தேர்விற்கு தோற்றியிருந்தனர். (அ-6)

# துணுக்காய் வலயத்தின் சித்திரப்போட்டி முடிவுகள்

டயலொக் தொலைத்தொடர்பு நிறுவனமும் வடக்கு மாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து துணுக்காய் கல்வி வலயத்தில் நடத்திய சித்திரப் போட்டி முடிவுகளை வலயக் கல்விப் பணிப்பாளர் மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்று மாகாணப் போட்டிக்கு தெரிவாகிய மாணவர் விபரங்கள் வருமாறு,

**தரம் 4 (பிரிவு I)**

த.தினோஜினி (மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை), ஜெ. மனோஜா (மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை), செ. ஜசிந்தன் (மு/ கற்சிலைமடு அ.த.க.பாடசாலை)

**தரம் 5 (பிரிவு II)**

உ. கலையரசன் (மு/முத்து விநாயகர் தமிழ் வித்தியாலயம்), க. தூயவன் (மு/பாளிநகர் மகா வித்தியாலயம்), ஆ. கலைநிலா (மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலை)

**தரம் 6 (பிரிவு III)**

ரா. தனுசியன் (மு/முத்தையன் கட்டு வலதுகரை மகா வித்தியாலயம்), ச.கமலேஸ்வரன் (மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை), ம.சிறில்க்சுமி (மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை),

**தரம் 7 (பிரிவு IV)**

தா. சிவறூபன் (மு/பாளிநகர் மகா வித்தியாலயம்), செ. கேதீசன் (மு/பாளிநகர் மகா வித்தியாலயம்) க. அனித்தா (மு/அனிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் வித்தியாலயம்) (அ-3-15)

# ஈரான் நாட்டின் உதவியுடனான மின்சார வேலைகள் பாதிப்பு

## அமெரிக்காவை சாடுகிறார் சம்பிக்க

அமெரிக்காவின் வலியுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாகவே ஈரான் அரசாங்கத்தின் உதவியுடன் இலங்கையில் இடம்பெற்று வருகின்ற மின்சார உற்பத்தி செயற்பாடுகள் தாமதமடைவதாக மின்சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

ஈரான் அரசாங்கத்தினால் இலங்கையில் ஆயிரம் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் அமெரிக்கா ஈரானுக்கு எதிராக பொருளாதாரத்தடை விதித்ததன் பின்னர் இந்த வேலைத்திட்டம் கைவிடப்பட்டது. இதன் காரணமாகவே குறித்த ஆயிரம் கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கான மின்சார வசதியை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கு அமெரிக்காவே காரணம் என்று அமைச்சர் பாட்டலி தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அமெரிக்கா ஈரானுக்கு எதிராக விடுத்திருந்த பொருளாதார தடைக்கு இலங்கை, இந்தியா உள்ளிட்ட எட்டு நாடுகளுக்கு விதிவிலக்கு வழங்கப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ-2)

# போலி இலக்கங்களுடன் சொகுசு வாகனங்கள்

(கொழும்பு)

நாட்டில் போலி இலக்கத் தகடுகளுடன் பல சொகுசு ரக வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் முறையாக பதிவு செய்யாது கராஜ் இலக்கங்களைப் பயன்படுத்தி இந்த வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களே இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களை மடக்கிப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர். (அ-2)




★ *1630*-மசாசுசெட்ஸ், பொஸ்டன் நகரம் அமைக்கப்பட்டது.

★ *1631*-ரோமப் பேரரசுடனான 30 ஆண்டுகள் போரில் சுவீடன் பிறைட்டென்ஃபெல்ட் என்ற இடத்தில் பெரும் வெற்றி பெற்றது.

★ *1787*-ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பு பிலடெல்பியாவில் கையெழுத்திடப்பட்டது.

★ *1789*-வில்லியம் ஹேர்ச்செல் மைமாஸ் என்ற துணைக்கோளைக் கண்டுபிடித்தார்.

★ *1809*-பின்லாந்து போரில் சுவீடனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது. பின்லாந்து ரஷ்யாவிடம் கையளிக்கப்பட்டது.

★ *1858*-ஆழ்கடல் தொலைத்தந்திச் சேவை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது.

★ *1862*-அமெரிக்க உள்நாட்டுப் போரில் மேரிலாந்தில் கூட்டமைப்பினருக்கும் அமெரிக்கப்படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற போரில் 4 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். இதுவே அமெரிக்காவில் ஒரே நாளில் அதிக இரத்தக் களரியை ஏற்படுத்திய போராகும்.

★ *1862*-அமெரிக்க உள்நாட்டுப் போர்: பென்சில்வேனியாவில் ஆயுதக்கிடங்கு ஒன்றில் ஏற்பட்ட பெரும் வெடிவிபத்தில் சிக்கி 78 பேர் பலியாகினர்.

★ *1908*-ஓர்வில் ரைட்டின் வானூர்தி தரையில் மோதிய விபத்தில் தோமஸ் செல் பிரிட்ஜ் என்பவர் விமான விபத்தில் முதலாவதாக உயிரிழந்தார்.

★ *1928*-சூறாவளி தென்கிழக்கு புளோரிடாவைத் தாக்கியதில் 2 ஆயிரத்து 500 பேர் கொல்லப்பட்டனர்.

★ *1956*- அவுஸ்திரேலியாவில் முதன்முதலாக தொலைக்காட்சி காண்பிக்கப்பட்டது.

★ *1974*-வங்காளதேசம்,கிரெனடா, கினி-பிசாவு ஆகியன ஐ.நா.வில் இணைந்தன.

★ *1976*-நாசா தனது முதலாவது மீள் விண்ணோடமான எண்டர் பிறைசஸ் பற்றிய தகவல்களை வெளியிட்டது.

★ *1978*-இஸ்ரேல்,எகிப்து ஆகியன காம்ப் டேவிட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

★ *1980*-போலந்தில் சொலிடாரிற்றி தொழிற்சங்கம் உருவாக்கப்பட்டது.

★ *1991*-லினக்ஸ் இயங்குதளம் (0.01) இணையத்தில் கிடைத்தது.

★ *1993*-கடைசி ரஷ்யப் படை போலந்தில் இருந்து வெளியேறியது.

★ *1997*-பெரியார் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

★ *2004*-இந்தியாவில் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ *1879*-ஈ.வெ.ரா., பெரியார் திராவிடர் கழகத் தந்தை (இ.1973)

★ *1897*-வில்லியம் கோபல்லாவ, இலங்கையின் ஆளுநர், முதலாவது ஜனாதிபதி (இ.1981)

★ *1989*-வ.ரா.மணிக்கொடி, எழுத்தாளர்

★ *1906*-ஜே.ஆர்.ஜெயவர்த்தன, இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி (இ.1996)

★ *1930*-லால்குடி ஜெயராமன், வயலின் மேதை

★ *1944*-ரைன் மெஸ்னர், இத்தாலிய மலையேறுநர்

★ *1950*-நரேந்திர மோடி, இந்திய அரசியல்வாதி

★ *1874*-ரஷீத் வாலஸ்,அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

★ *1665*-நான்காம் பிலிப், ஸ்பெயின், போர்த்துக்கல் இலங்கை மன்னர் (பி.1605)

★ *1948*-ரூத் பெனடிக்ட், அமெரிக்க மனிதவியலாளர் (பி.1887)

★ *1959*-கு. வன்னியசிங்கம், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் (பி.1911)

★ *1953*-வி.க.தமிழறிஞர் (பி.1883)

★ *1979*-எம்.ஆர்.ராதா, தமிழ்த்திரைப்பட நாடக நடிகர் (பி.1907)

★ *1994*-கார்ல் பொப்பர்,ஆஸ்திரிய மெய்யியலாளர் (பி.1902)



**ஜே.ஆர்.ஜயவர்தனா**

ஜூனியஸ் ரிச்சட் ஜயவர்தனா இலங்கையின் இரண்டாவது ஜனாதிபதியும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதியுமாவார். இவர் பெயரின் சுருக்கமான ஜே.ஆர். என பிரபலமாக அறியப்பட்டார். இவர் ஜனாதிபதி பதவியை ஏற்கும் முன் அரசில் பல பதவிகளை வகித்துள்ளார். இவர் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தியதோடு அதன் தலைவராகவும் செயலாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவை வரவேற்கும் காங்கிரசை கண்டித்து நேற்று சென்னையில் ஆர்ப்பாட்டம்

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு வருவதை உடனே எதிர்க்க வேண்டும். அதைமீறி தமிழர்களின் உணர்வை கொச்சைப்படுத்தியவருக்கு வரவேற்பு கொடுப்பார்களானால் தமிழின இந்துக்கள் தனக்கு ஒரு புதிய மதமாக தமிழர் மதத்தை உருவாக்க முயலும் என தமிழர் முன்னேற்றக்கழகம் எச்சரிக்கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் சென்னையில் தமிழர் முன்னேற்றக்கழகம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

ஈழத்தில் நடந்தது ஒரு இனப்படுகொலை. அதை முன்னின்று நடத்தியது சோனியாவின் காங்கிரஸ் அரசு. எதிர்க்கட்சியான பா.ஜ.க இங்கு இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தில் நம்மோடு இருந்து தமிழக மீனவர்களுக்காகவும் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தது என தமிழர்கள் அதன் மீது சிறிது பற்று கொண்டிருந்தனர்.

இந்நிலையில் இலங்கை செல்லும் தூதுக் குழுவிற்கு தலைமையாக சென்ற பா.ஜ.கவின் சுஷ்மா சுவராஜ் ராஜபக்ஷவை தனிமையாக சந்தித்துவிட்டு இங்கு வந்தவுடன் தமிழர்கள் தனி நாடு கேட்கவில்லை என பொய் சொல்ல தொடங்கினார்.

அதன் பின் அவரின் சொந்த தொகுதியில் ராஜபக்ஷவிற்கு வரவேற்பு கொடுக்க காத்திருக்கிறார். ராஜபக்ஷவின் வரவு இந்திய, இலங்கை உறவை பலப்படுத்தும் என்கிறார். தமிழர்கள் ராஜபக்ஷ இந்தியா வருவதை எதிர்க்கவில்லை என்று அப்பட்டமாக முரளி மனோகர் ஜோசி பொய் சொல்கிறார்.

அன்று இராமர் கோவில் கட்ட இந்தியா முழுக்க இந்துக்களை திரட்டிய பா.ஜ.க இராமர் பாலம் காக்க இன்றும் வலுவாக குரல் கொடுக்கும் பா.ஜ.க. ஈழத்தில் கொல்லப்படுபவர்களில் பெரும்பாலானோர் இந்துக்கள் என தெரிந்து வலுவாக போராடி இருக்க வேண்டும் செய்ததா? இல்லை.

நடந்தது இனப்படுகொலை என உலக அரங்கில் தனி ஈழத்திற்கான ஆதரவு பெருகி வரும் நிலையில் அதற்கு எதிராக தனிநாடு தேவையில்லை என பேசும் கட்சிகள் தனி ஈழத்தை எதிர்க்கின்றோம் என வெளிப்படையாக கூற தயாரா?

இந்தியம் காக்க நினைப்பவர்கள் இந்தியத்தை நேசித்த தமிழர்களுக்கே ஆதரவளித்திருக்க வேண்டும். இவர்கள் காக்க நினைப்பது இந்தியம் என்ற பெயரில் ஆரியத்தைத் தான். ஆரியத்தை காக்க நினைப்பவர்கள் ஆரியர்களை வைத்தே காக்கலாம். அதை விட்டு தமிழர்களை பலிகொடுத்து இந்தியம் காக்க நினைப்பது வெட்கக்கேடானது.

ஆர்ப்பாட்டத்தில் தமிழர் முன்னேற்ற கழக பொதுச் செயலாளர் அதியமான், இயக்குநர் புகழேந்தி தங்கராஜ், த.மு.க. மாநில பொறுப்பாளர்கள், திருச்சி ஜெயதேவ் பாலச்சந்திரன், தமிழர் எழுச்சி இயக்க வேலுமணி , தமிழர் பண்பாட்டு நடுவம் ராஜ்குமார் பழனிச்சாமி, மே 17 இயக்க உமர், உலக தமிழர் பாதுகாப்பு இயக்க ராஜா ஸ்டாலின், விடுதலை சிறுத்தைகள் ரமேஷ், உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் மற்றும் தமிழ் உணர்வாளர்கள் கலந்து கொண்டனர். (அ-2)

# கடந்த எட்டு மாதத்தில் 25 ஆயிரம் விபத்துக்கள்

## பொலிஸ் தலைமையகம் தகவல்

(கொழும்பு)

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் ஓகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 25 ஆயிரம் வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் அவ்விபத்துக்களால் ஆயிரத்து 500 பேர் பலியாகியுள்ளதுடன் 11 ஆயிரம்பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு நாளுக்கு நாள் அதிகரிக்கும் வாகன விபத்துக்களை கட்டுப்படுத்த பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதற்கு சாரதிகளின் ஒத்துழைப்பும் பொதுமக்களின் ஒத்துழைப்பும் தேவையெனவும் தலைமையகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

மதுபோதையில் வாகனங்களை செலுத்துதல், கட்டுப்படுத்த முடியாத வேகத்தில் வாகனங்களை ஓட்டிச் செல்லல், சாரதிகளிடையேயான போட்டித்தன்மை, நித்திரை கலக்கத்தில் வாகனங்களை செலுத்துதல் உள்ளிட்ட பல்வேறு காரணிகள் இவ்வாறு விபத்துக்கள் அதிகரிக்க காரணமாய் அமைந்துள்ளன.

வாகன விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கு கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும் அவற்றை கட்டுப்படுத்த முடியாமல் உள்ளமை கவலைக்குரிய விடயமே.

வாகன விபத்துக்கள் அதிகரிப்பதற்கு பாதசாரிகளின் கவனயீனமும் ஒரு காரணமாய் அமைந்துள்ளது.

எனவே, வாகன விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும். அத்தோடு சாரதிகள் போக்குவரத்து விதிமுறைகளை முறையாக பின்பற்ற வேண்டும். அதேபோன்று பாதசாரிகளும் பாதைகளை கடக்கும் போதும் வாகனங்களில் பயணிக்கும் போதும் ஏனைய பல சந்தர்ப்பங்களிலும் மிகுந்த அவதானத்துடன் செயற்படுவதன் மூலம் வாகன விபத்துக்களை கட்டுப்படுத்தலாம். (அ-9)

# 13 ஆவது திருத்தம் தொடர்பில் மக்கள் மத்தியில் வாக்கெடுப்பு நடத்துங்கள்

## சிங்கள புத்திஜீவிகள் ஜனாதிபதிக்கு மகஜர்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு பொலிஸ் காணி அதிகாரங்களை வழங்கும் வகையிலான 13 ஆவது அரசியல் அமைப்புத்திருத்தச் சட்டத்தில் உள்ள ஏற்பாட்டை உடனடியாக நீக்குவதற்காக மக்கள் கருத்தை அறியும் வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என வெளிநாடுகளில் வாழும் இலங்கை புத்திஜீவிகள் 63 பேர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் இலங்கையில் தனிநாட்டை உருவாக்கும் சர்வதேச சமூகத்திடம் சுயாட்சிக்கான மக்கள் கருத்தை அறியும் வாக்கெடுப்பை நடத்துவது தொடர்பில் மிகவும் தந்திரோபாயமான முறையில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அவர்கள் எச்சரித்துள்ளனர்.

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி குணவர்த்தன, முன்னாள் லெப்டினட் கேணல் அனில் அமரசேகர, ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ, கலாநிதி காமினி குணதிலக்க, மஹிந்த குணசேகர, அஜந்தா பிரேமரட்ன, ரஞ்சித் கொய்சா, கலாநிதி சூலா டி சொய்சா உட்பட அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, மத்திய கிழக்கு, நியூசிலாந்து, பிரித்தானியா ஆகிய நாடுகளில் உள்ள சிங்கள புத்திஜீவிகள் இந்த கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்துள்ளனர்.

எதிர்காலத்தில் நாட்டை பிரிக்கும் அடித்தளத்தை இடுவதற்காகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை கோருவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

சர்ச்சைக்குரிய இந்த 13 ஆவது திருத்தம் குறித்து மக்கள் மத்தியில் கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டும் எனவும் அவர்கள் மகஜரில் தெரிவித்துள்ளனர். (அ-2)



ஆவரங்கால் சர்வோதய சனசமூக நிலைய திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இலங்கை செஞ்சிலுவைச்சங்க வலி. கிழக்கு பிரிவுத்தலைவர் இ.மயில்வாகனம், வலி.கிழக்கு பிரதேச சபையின் உறுப்பினர் கி.லிங்கேஸ்வரன் ஆகியோர் இணைந்து கட்டடத்தை நாடா வெட்டி திறந்து வைப்பதை படத்தில் காணலாம். (படம்:-நல்லூர் செய்தியாளர்)

# கொழும்பு சிட்டி

(கொழும்பு)

இரத்மலானையில் அமைந்துள்ள விமான நிலையத்தின் பெயர் கொழும்பு சிட்டி விமான நிலையம் என பெயர் மாற்றப்பட்டுள்ளது.

குறித்த விமான நிலையமானது நேற்று முன்தினம் முதல் கொழும்பு சிட்டி விமான நிலையம் என அழைக்கப்படும் என விமான நிலைய முகாமையாளர் சரத் டி சில்வா தெரிவித்துள்ளார். (அ-2)

# மாகாண மட்ட விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்கு பங்களிப்பு வழங்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு

மாகாண மட்ட விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்கு எதிர்காலத்தில் முழுமையான பங்களிப்பு வழங்கப்படும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வடமாகாண விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண மட்டத்தில் நடைபெறும் இந்நிகழ்வானது எமக்கு மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தும் அதேவேளை கடந்தகால கசப்பான அனுபவங்களிலிருந்து எமது மக்களை இவ்வாறான நிகழ்வுகளினூடாக மாற்றம் பெற வைக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.


அத்துடன் இனம், மதம், மொழி போன்ற வேறுபாடுகளைக் களைந்து ஒருமைப்பாடுள்ள சமுதாயத்தைக் கட்டி வளர்ப்பதற்கு மாகாண மட்டத்திலான விளையாட்டு நிகழ்வுகள் முக்கியத்துவம் பெறும்.

மாகாண மட்டத்தில் எதிர்காலங்களில் முன்னெடுக்கப்படும் இதுபோன்ற விளையாட்டுக்களுக்கும் அவற்றின் மேம்பாட்டுக்கும் முழுமையான பங்களிப்பு வழங்கப்படுமென அமைச்சர் இதன்போது உறுதிமொழி வழங்கினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

43


மன்னர் ஆட்சிக்காலத்து அபயகிரி வாசல் சட்டகம்


மன்னர் ஆட்சிக்காலத்து பெரிய தாதுகோபம்

நரசிம்மனும் இப்படைகளுடன் வருவது போன்றதொரு மயக்கத்தைத் தமிழ் வீரர்களிடையே ஏற்படுத்தியிருந்தான். கப்பற்படைக்குத் தலைமையேற்று முன்சென்ற கலத்தில், அரசமுரசை அடிக்கடி முழங்கச் செய்ததன் மூலம், தான் அக்கப்பலில் பயணிப்பதாகத் தனது வீரர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தினான். படைவீரர்கள், மாதோட்டத்தில் கரையிறங்கினர். உடனடியாக வடபகுதியைத் தனது ஆதிகத்தில் கொண்டுவந்தனர். சிலநாள் அவ்விடத்தில் இளைப்பாறிய பின்னர், அனுராதபுரத்தை நோக்கி படை நடந்தது. பொத்தகுட்டன் (தமிழ் அமைச்சர்), மன்னன் ஹத்ததாடன் ஆகிய இருவரினதும் சேனைகளுடன் போரிட்ட மானவர்மன், அவர்களின் சேனாவீரர்களை வதம் செய்தான். தப்பியோடிய ஹத்ததாடனை நாட்டு மக்கள் சிலர் பிடித்து, அவனது தலையைக் கொய்து, மானவர்மனிடம் வழங்கினர். தப்பியோடிய பொத்தகுட்டன் மேருகந்தாரம் மலைப்பகுதியில் அடைக்கலம் புகுந்தான். மேருகந்தாரம் மலைப்பகுதியில் தலைவன், "எனது நீண்டகால நண்பனான பொத்தகுட்டனுக்கு அடைக்கலம் அளிக்காது. எவ்வாறு என்னால் விடமுடியும்? அதேவேளை என் மன்னனுக்கு எவ்வாறு நான் துரோகம் செய்ய முடியும்?" என பிரச்சினை வசப்பட்டு நஞ்சுண்டு தற்கொலை செய்து கொண்டான். தனக்காக மேருகந்தாரத் தலைவன் இறந்தான் எனக் கேள்விப்பட்ட பொத்தகுட்டன் கழிவிரக்கமடைந்து தானும் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டான். இந்நிலையில்


செங்கை ஆழியான்

வன் மகிந்தன் (கி.பி 777- கி.பி. 797) ஆவான்.

மகிந்தனுக்கு, நீலன் என்றொரு இணைபிரியாத நண்பன் இருந்தான். முடிபுனைவு நாளன்று அவன் மரணமடைந்தமையால், மகிந்தன் மணிமுடி தரிக்காது விட்டான். தன்னை ஆட்சியின் மேற்பார்வையாளன் "ஆதிபாதா" என அழைத்து முடி புனையாது அரசியற்றினான். தனது மூத்த சகோதரன் காசியப்பனின் மகனான அக்கபோதியை அழைத்து அவனை யுவராஜாவாக நியமித்தான். பட்சின தேசத்தை (கிழக்குப் பிராந்தியம்) நிர்வகிக்குமாறு அவனை அனுப்பி வைத்தான். தக்கிண தேசத்தை தன் சொந்த மகனின் (அவனது பெயரும் அக்கபோதி) பொறுப்பில் நிர்வகிக்க வைத்தான்.

மகாவலி விருந்தினர் விடுதிக்கு (பிக்குகள் உணவு சாலை) ஒவ்வொரு நாளும் பத்து வண்டிகள் உணவு

## மானவர்மன் பரம்பரையினரின் ஆட்சி

யுத்த வெற்றியின் பரிசாகப் பெரும் சைனியம் ஒன்றினை நரசிம்மன், மானவர்மனுக்கு வழங்கினான். "தன்னுடைய அன்பையும் விசுவாசத்தையும் எனக்குக் காட்டிய என் நண்பனுக்கு இன்னமும் நான் கடனாளியாக இருக்கக்கூடாது" என எண்ணிய நரசிம்மன், மானவர்மனைப் பெரும் படையுடன் இலங்கைக்கு அனுப்பி வைத்தான். "மானவர்மனை அனுராதபுர அரியாசனத்தில் அமர்த்துக" எனத் தன் சேனா வீரர்களுக்குக் கட்டளையிட்டான். நரசிம்மன் விரும்பியபடி தன் சொந்த மகனை இழப்பதுபோல, மானவர்மனை வழியனுப்பி வைத்தான். படைவீரர்களோடு கடலைக் கடந்து கப்பல்கள் மூலம் இலங்கையின்


(செங்கை ஆழியான்)
கலாநிதி. கந்தையா. குணராசா,
கமலா குணராசா

கரையை மானவர்மன் அடைந்தான். இதனைக் கேள்வியுற்ற தத்தோபதீசன், நம்பிக்கையான வீரர்களோடு தலைநகரை விட்டுத் தலைமறைவாகினான். தலைநகருக்குள் பிரவேசித்த மானவர்மன் நகரத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பின்னர், முடிதரிப்பதற்கு முன்னர், தப்பியோடிய தத்தோபதீசனைச் சிறைப்பிடிக்கும் நோக்கோடு தன் வீரர்களை நடாத்தினான். அவ்வேளை நரசிம்மபல்லவன் கடும் சுகயீனமுற்றிருப்பதாக வதந்தி பரவியதால், தமிழர் படையில் ஒரு பகுதியினர் இந்தியா திரும்ப நேர்ந்தது. இதனைப் பயன்படுத்திய தத்தோபதீசன், பெரும் சைனியத்துடன் மானவர்மன் மீது படையெடுத்தான். இந்த தருணத்தில் அவனை எதிர்ப்பதால் பயனில்லை எனக் கண்ட மானவர்மன் மீண்டும் இந்தியாவிற்குத் தப்பியோடி, நரசிம்மனிடம் அடைக்கலம் புகுந்தான். அவன் அடைக்கலம் புகுந்தபின்னர், இலங்கை ஆட்சியில் நான்கு மன்னர்கள் மாறியிருந்தனர்.

நரசிம்மன் யோசித்தான். "எனது நண்பன் பல வருடங்களை எனது சேவையில் கழித்துவிட்டான். இனியும் அவனது இராச்சியத்தைப் பெற்றுக் கொடுக்காதிருப்பது நியாயமாகாது. அவனுக்கும் வயதாகிவருகிறது" என்று எண்ணிய நரசிம்மன், மீண்டும் ஒரு படையுடன் மானவர்மனை இலங்கைக்கு அனுப்பிவைத்தான். மானவர்மன், அனுராதபுரத்தின் மணி முடியைத் தரித்துக் கொண்டான். பல விகாரைகளையும், நீர்ப்பாசனக் குளங்களையும் அமைப்பித்தான். முப்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான்.

### மூன்று மன்னர்கள்

மானவர்மனுக்குப்பின்னர் அவனுடைய புதல்வர்களான அக்கபோதி V, காசியப்பன் III, மகிந்தன் II ஆகியோர் ஆட்சி புரிந்தான் என அறியப்படுகிறது. மானவர்மனின் பின் அவனது மூத்த மகனான அக்கபோதி அரசனானான். அவன் பௌத்தசமயத் தொண்டுகள் பலவற்றினைச் செய்தான். ஆறுவருட ஆட்சியின் பின் அவன் மரணமடைந்தான். அதன் பின்னர் அவனது சகோதரனான காசியப்பன் அரச கட்டிலேறினான். பிக்குகளையும், பிராமணர்களையும் தக்கவாறு மரியாதை செலுத்திப் பராமரித்தான். காசியப்பனுக்குப் பிறகு ஆட்சி பீடமேறிய


இசுருமுனிய கோவில்

அனுப்பி வைத்தான். பிக்குணிகளுக்காக ஒரு விடுதி, தன் பெயரில் அமைத்துக் கொடுத்தான். மூன்றாண்டுகள் ஆட்சியின் பின்னர் மரணமடைந்தான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் மதுப்பிரியர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பு

## பொலிஸ் தரப்பு தரவுகளில் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மதுப்பிரியர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு வாரங்களிலும் மதுபோதை தொடர்பில் 126 பேர் கைதாகி நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டு உள்ளனர்.

இவர்களில் அதிகபட்சமாக 48 பேர் மது போதையில் வாகனங்கள் செலுத்தும் போது வாகன போக்குவரத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்துவோர் தொகை அதிகரித்து வருகிறது. இதனால் நாளுக்கு நாள் வீதி விபத்துக்களும் அதிகரித்து வருகின்றன.

சாரதிகள் பொறுப்பில்லாமல் மதுபோதையில் வாகனங்கள் செலுத்துவதனால் வீதியில் பயணிப்போரின் உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லாத்தன்மை காணப்படுகிறது.

மதுபோதையில் வாகனம் செலுத்துவோரில் ஒரு சிலர் போக்குவரத்து பேருந்து சாரதிகளும் உள்ளடங்குகின்றனர்.

ஆயினும் அதிகமாக மோட்டார் சைக்கிளில் செல்வோரே இவ்வாறு மதுபோதையில் செல்கின்றனர். இதைவிட பொது இடங்களில் மதுமயக்கத்தில் அலைந்து திரிந்த 38பேரும் சட்டவிரோதமாக மது வைத்திருந்த 20 பேரும் கஞ்சா வைத்திருந்த இருவரும் பொது இடங்களில் மதுபோதையில் ரகளையில் ஈடுபட்ட 18 பேருமாக மொத்தம் 126 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மது சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்களின் தொகை இம்மாத முதல் வாரத்தில் 48 பேரும் அடுத்த வாரத்தில் 78 ஆகவும் உயர்ந்துள் ளது.

மதுபோதையினால் வன்முறைச் சம்பவங்கள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. திருநெல்வேலியில் இடம்பெற்ற கொலைச் சம்பவமும் மதுபோதையிலேயே இடம்பெற்றுள்ளது.

எனவே, இவ்வாறு வீதிகளில் மதுபோதைகளில் திரிவோர் தாமாகவே உணர்ந்து செயற்படவேண்டும். எல்லாவற்றினையும் பொலிஸார் கட்டுப்படுத்த முடியாது.

மேலும் கடந்த வாரத்தில் பாரிய குற்றச் செயல்கள் மிகக் குறைவாகவே இடம்பெற்றுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# மேலதிக சிகிச்சைக்காக பிரதமர் அமெ.பயணம்

(கொழும்பு)

உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ள பிரதமர் டி.எம்.ஜயரட்ன மேலதிக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் நள்ளிரவு விசேட விமானம் மூலம் அமெரிக்கா சென்றுள்ளதாக அரசாங்க தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று மாத காலத்திற்கும் மேலாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பிரதமர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையை அடுத்து அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதனடிப்படையில் பிரதமருடன் விசேட மருத்துவர்கள் சிலரும் அவரது அதிகாரிகள் சிலரும் அமெரிக்கா சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# தமிழீழமே தீர்வாக அமைய பொதுவாக்கெடுப்பு வேண்டும்

## ம.தி.மு.க. மாநாட்டில் தீர்மானம்

(கொழும்பு)

தமிழீழமே தீர்வு. அதற்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று ம.தி.மு.க. மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கரூரில் ம.தி.மு.க. சார்பில் திராவிட இயக்க நூற்றாண்டு அண்ணா பிறந்த நாள் விழா ம.தி.மு.க. மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இலங்கையில் ஈழத்தமிழர்கள் படுகொலைக்கு காரணமான இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அனைத்துலக நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி தண்டிப்பதையும் பொது வாக்கெடுப்பு மூலம் இலங்கையில் சுதந்திர தமிழீழத்தை அமைப்பதையும் ஒரே இலக்காக கொண்டு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் பாடுபட்டு வருகிறது.

உலகம் முழுவதிலும் இதற்கான ஆதரவை திரட்டுகின்ற பணியில் ம.தி.மு.க. ஈடுபடும். இலங்கை ஜனாதிபதியை சாஞ்சிக்கு வர அனுமதிக்க கூடாது.

பெரியார் பிறந்தநாளான இன்றைய தினம் வைகோ தலைமையில் இலங்கை ஜனாதிபதிக்கு கறுப்புக்கொடி காட்டுவதற்காக சாஞ்சிக்கு புறப்பட்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. (அ-2)

# புதிய இசட் புள்ளிகளின்படி பல்கலைக்கு விண்ணப்பிக்கலாம்

## பல்கலை.மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

2011 கல்விப்பொதுத்தராதர பத்திர உயர்தரப்பரீட்சையின் புதிய இசட் புள்ளியின் படி பல்கலைக்கழக பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கவும்.

ஏற்கனவே விண்ணப்பித்த பாடநெறிகளை மாற்றிக் கொள்ளவும் எதிர் வரும் 28 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி எந்தவொரு மாணவராவது பல்கலைக்கழக அனுமதி பெற விண்ணப்பிக்காதிருந்தால் அவர்களும் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

தேவையான விண்ணப்ப படிவங்களை எதிர்வரும் 26 ஆம் திகதிவரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில் பெற்றுக்கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# மிருகபலி தொடர்பில் விசாரிக்கிறார் மேர்வின்

(கொழும்பு)

இலங்கையின் எந்த பகுதியிலாவது மிருக பலி மேற்கொள்ளப்படுகிறதா என்பது குறித்து விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாக அமைச்சர் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

முன்னேஸ்வரம் காளி கோயிலில் மிருக பலி பூசையை நிறுத்துமாறு அமைச்சர் மேர்வின் சில்வா அழுத்தங்களை பிரயோகித்து வருகின்ற போதும் கோயில் நிர்வாகம் அதனை நிராகரித்து வருகிறது.

இந்த நிலையில் பொதுமக்கள் உறவுத் துறை அமைச்சர் என்ற வகையில் நாட்டின் ஏனைய இடங்களில் உள்ள கோயில்களில் மிருக பலி இடம்பெறுகிறதா என்பதை விசாரணை செய்யப் போவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை முன்னேஸ்வரம் காளி கோயிலை வேறு இடம் ஒன்றுக்கு மாற்றுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

# முல்லை.மாவட்டத்தில் வீட்டுத்தோட்ட போட்டி

(மல்லாவி)

குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் முல்லை.மாவட்டத்தில் இவ் ஆண்டுக்கான வீட்டுத்தோட்ட போட்டிகள் நடாத்தப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் (விரிவாக்கம்) தெ.யோகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இப்போட்டியானது கிராம வீட்டுத்தோட்டம், பாடசாலைத் தோட்டம், மாணவர் வீட்டுத் தோட்டம், அலுவலக வீட்டுத்தோட்டம், அலுவலர் வீட்டுத்தோட்டம் எனும் ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு வகையான வீட்டுத்தோட்டங்களுக்கும் போட்டியாளர்கள் விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியில் தனித்தனியாக மதிப்பிடப்பட்டு முதல் இடத்தை பெறும் போட்டியாளர் மாவட்ட மட்ட போட்டியில் பங்கு கொள்ள முடியும்.

மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்றுக் கொள்ளும் போட்டியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

வெற்றியாளர்களின் தெரிவின் போது திட்டமிட்ட பயிர்ச்செய்கை, மண் பாதுகாப்பு முறைகள், சேதனப்பசளை பாவனை, இயற்கை முறை பீடைக்கட்டுப்பாடு, போசாக்கு உணவு உற்பத்தி, மிகை உற்பத்திகளை பாதுகாப்பதற்கான செயற்பாடுகள், ஒருங்கிணைந்த பயிர் விலங்கு வேளாண்மை போன்ற பல விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் அலுவலகங்கள், பாடசாலைகள் தங்கள் பகுதிக்கான விவசாய போதனாசிரியாரிடமோ அல்லது முல்லை. மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் (விரி வாக்கம்) அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது 021 229 0006 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-15)





யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தினால் யாழ். தாதியர் பயிற்சி பாடசாலையில் சமையல் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இப்போட்டியில் பங்கு கொண்டவர்களையும் போட்டிக்கான புள்ளி வழங்கல் நடைபெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநீதம்பிள்ளை குழுவினரை இலங்கை அரசு அனுமதித்தது ஏன்?

## ஈராக், லிபியாவின் நிலை இங்கும் ஏற்படும் –ஹெல உறுமய

நவநீதம்பிள்ளையின் குழுவினரை இலங்கைக்கு வருவதற்கு அரசாங்கம் அனுமதித்தமையை கடுமையாக எதிர்ப்பதாகவும், கண்டிப்பதாகவும் தெரிவிக்கும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய இதன் பின்னணியில் சில ஆலோசகர்களும், நாட்டுக்கு எதிரான துரோகிகளும் இருப்பதாகக் குற்றம் சாட்டியது.

இவர்களது வருகையால் எதிர்காலத்தில் ஈராக், லிபியாவுக்கு ஏற்பட்ட நிலை இலங்கைக்கும் ஏற்படுமென்றும் ஹெல உறுமய எச்சரிக்கை விடுத்தது.

கொழும்பு பௌத்தலோக மாவத்தையிலுள்ள கர்மவிஜய அமைப்பின் கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகவியலாளர் மாநாட்டிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. இங்கு உரையாற்றிய ஹெல உறுமயவின் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர், ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவின் தலைவர் நவநீதம்பிள்ளையின் தொழிற்பாட்டுக்குழு இலங்கைக்கு வருவதை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், அக்கோரிக்கையை நிராகரிப்பதாகவும் அரசாங்கம் அன்று தெரிவித்தது.

ஆனால், இன்று அந்நிலைப்பாட்டை கைவிட்டு ஐ.நா. குழுவினர் இலங்கைக்கு வருவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இம்மாற்றத்துக்கு அரசாங்கத்திலுள்ள சில ஆலோசகர்களும், நாட்டுக்கு எதிரான துரோகிகளுமே காரணமாவர். அத்தோடு அமெரிக்கா எமக்கெதிராக ஐ.நா.வில் கொண்டு வந்த பிரேரணையை எதிர்த்தோம்.

யுத்தம்,மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐ.நா.வில் அமெரிக்கா முன்வைத்த குற்றச்சாட்டுக்களுக்கு உள்நாட்டிலேயே விசாரணைகள் நடத்தப்படுமென்றும் இதற்கு ஐ.நா. மனித ஆணைக்குழுவினரோ,வேறு நாட்டின் குழுவினரோ இங்கு வரவேண்டிய அவசியமில்லை என்று அன்று அரசாங்கம் எதிர்த்தது.

ஆனால்,இன்று ஐ.நா. குழுவினரை வரவேற்கின்றது. ஈராக், ஆப்கானிஸ்தான், லிபியாவுக்குள்ளும் இவ்வாறே ஐ.நா. குழுவினர் உட்புகுந்தனர். இறுதியில் ஈராக்கின் தலைவர் சதாம் ஹுசைனைக் கொன்றது மட்டுமல்லாது இன்று எட்டு இலட்சம் மக்களைக் கொன்று குவித்தது.

இதேபோன்றுதான் லிபியத் தலைவரையும் கொன்று நாட்டு மக்களையும் கொலை செய்தனர். அமெரிக்காவே இந்நாடுகளில் மனித உரிமை மீறல்கள் கொலைகளை செய்தது. ஆனால்,ஐ.நா. இம்மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தியதாக இல்லை.

ஐ.நா. பக்கச்சார்பாகவே நடந்து கொண்டது. ஆனால், இலங்கையில் 30 வருடங்கள் மக்களையும் நாட்டையும் அழித்து பயங்கரவாதமே ஒழிக்கப்பட்டது. இதன்போது மனித உரிமைகளை எமது படையினர் பாதுகாத்தனர். அப்பாவி தமிழ்மக்களுக்கு அடைக்கலம் வழங்கினார்கள்.

இவ்வாறானதொரு நிலையிலேயே யுத்தக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. ஆனால், விடுதலைப்புலி பயங்கரவாதிகளுக்கு எதிராக எந்த விசாரணைகளும் இல்லை. இன்னமும் வெளிநாடுகளில் புலித்தலைவர்கள் வாழ்கின்றனர். அவர்கள் மீதும் விசாரணைகள் இல்லை. இவை தொடர்பில் அரசாங்கம் ஊடகங்கள் மூலம் பிரசாரத்தை மேற்கொண்டிருக்க வேண்டும். எதனையும் செய்யாது அமெரிக்காவின் தேவைக்கு அரசாங்கம் இணங்கியுள்ளது. இது எதிர்காலத்தில் நாட்டுக்கும் தலைவர்களுக்கும் ஆபத்தாக மாறும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

## புதிய அரசியல் கட்சி ஒன்றை பதிவு செய்யப்போகிறேன்

### பொன்சேகா தெரிவிப்பு

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா புதிய அரசியல் கட்சி ஒன்றை பதிவு செய்யப்போவதாக அறிவித்துள்ளார். அதே நேரம் இலங்கையில் பொது எதிர்க்கட்சி என்ற கொள்கையை தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குருநாகலில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், பொது எதிர்க்கட்சி என்ற கோட்பாட்டின் போது அதன் தலைவர் யார் என்பதை பற்றி பேசத் தேவையில்லை.

ஜனாதிபதி தேர்தல் ஒன்று வரும்போது பொது எதிர்க்கட்சியின் தலைவர் யார் என்பதை தீர்மானித்துக் கொள்ளலாம். ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை மக்களே தீர்மானிக்க முடியும்.

இதேவேளை தமது புதிய கட்சி பதிவு செய்யப்பட்ட பின்னர், அதன்மூலம் எதிர்வரும் மாகாணசபை தேர்தல்களில் போட்டியிடுவது குறித்து ஆராயப்படும்.

அண்மையில் இராணுவ மேஜர் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் கைது செய்யப்படாமை குறித்து கருத்து வெளியிட்ட சரத்பொன்சேகா, கல்கிஸையில் உள்ள ஜனாதிபதியின் மைத்துனர் வீட்டுக்குள் புகுந்த திருடனை 24 மணித்தியாலங்களுக்குள் பிடிக்க முடிந்தது.

எனினும் நாடுமுழுவதும் டீசேட்டுடன் வலம் வந்து கொண்டிருக்கும் மேர்வின் மகன் மாலக்க சில்வாவை பொலிஸாரால் கைது செய்ய முடியாமை ஆச்சரியப்படவேண்டியுள்ளது என்றார். (அ-2)

## அறுவடை இயந்திரத்தில் சிக்கி சிறுவன் உயிரிழப்பு

அறுவடை இயந்திரம் ஒன்றுக்குள் சிக்கி சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் அரலகன்வில-திம்புலாகல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக தெரியவருவதாவது,

மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயது சிறுவன் அறுவடை இயந்திரத்தை இயக்குவதில் தனது தந்தை மற்றும் கிராமவாசிகளுக்கு உதவியளித்துக் கொண்டிருந்தபோதே இப்பரிதாபச் சம்பவம் நடைபெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெறுவதாகவும் அரலகனவில் பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

## மேர்வின் மகனைப்பிடிக்க பொலிஸார் தீவிர வேட்டை

இராணுவ மேஜரொருவரைத் தாக்கிவிட்டு தலைமறைவாகியிருக்கும் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகனான மாலக்க சில்வாவையும் ஏனைய சந்தேக நபர்களையும் கைது செய்வதற்கான விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வெகுவிரைவில் அவர் கைது செய்யப்படுவார் எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டலொன்றின் வாகனத் தரிப்பிடத்தில் வைத்து மாலக்க சில்வா அடங்கலான 7 பேர் அடங்கிய குழுவினர் இராணுவ மேஜரைத் தாக்கியதாகக் கொம்பனி வீதி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரும் கொம்பனி வீதி பொலிஸாரும் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இராணுவ குற்றப்புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த மேஜரொருவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளதாகவும் அவரின் வாக்குமூலத்தின் பிரகாரமும் மேலும் பலரிடம் பெறப்பட்ட வாக்குமூலங்களின் பிரகாரமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். (அ-2)

## அக்கரை கிராமமக்களின் காணிப்பிரச்சினைக்கு தீர்வு

### அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)


அச்சுவேலி அக்கரை கிராமமக்களினது காணி தொடர்பான பிரச்சினைக்கு உரிய வகையில் தீர்வு காணப்படும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உறுதிமொழி வழங்கினார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்திற்கு மேற்படி கிராம மக்கள் நேற்று முன்தினம் வருகை தந்து தமது பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 1978 ஆம் ஆண்டு அரசினால் பகிர்ந்தளிக்கப்பட்ட காணி தொடர்பில் தாம் எதிர்நோக்கி வருகின்ற இடர்பாடுகள் குறித்து மக்கள் பிரதிநிதிகள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இதனை அடுத்து இவ்விடயம் தொடர்பாக துறை சார்ந்தவர்களுடன் ஆராய்ந்தறிந்து உரிய தீர்வு பெற்றுத்தரப்படும் என உறுதிமொழி வழங்கினார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளர் ஐங்கரன் ஆகியோர் உடனிருந்தனர். (அ-9)



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் வடக்கின் துரித மீள் எழுச்சித்திட்டத்தினால் 5.2 மில்லியன் ரூபா செலவில் கோயில்வயல் பாடசாலை புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கடந்த 5 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கட்டடத்தை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர் களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சிவநகர் செய்தியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குலகுடன் முரண்படும் அணியுடன் இணைகிறதா இலங்கை அரசாங்கம்?



## விளைவு விபரீதமாகலாம்...!

மேற்குலகுடனான உறவுகள் கசந்து போன நிலையில், இலங்கையின் கவனம் இப்போது சர்ச்சைக்குரிய நாடுகளின் பக்கம் திரும்பத் தொடங்கியுள்ளது. கடந்த மாத இறுதியில், மேற்குலகினால் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படும் இரண்டு நாடுகளுக்கு இலங்கையின் இரு முக்கிய தலைவர்கள் சென்றிருந்தனர். ஒருவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, மற்றவர் அவருக்கடுத்து அதிகாரம் படைத்தவராக கருதப்படும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அணிசேரா நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ஈரான் சென்றிருந்தார். ஈரானில் நடைபெற்ற இந்த மாநாட்டுக்குச் செல்லவேண்டாம் என்று ஐ.நா. பொதுச்செயலரிடம் வெளிப்படையாகவே அமெரிக்கா கேட்டிருந்தது. ஏனைய உறுப்பு நாடுகளுக்கு அவ்வாறு அமெரிக்கா கோரிக்கை விடுக்காது போனாலும், அமெரிக்கா உள்ளூர விரும்பவில்லை என்பதே உண்மை. அமெரிக்காவின் விருப்பு வெறுப்புப்பற்றிக் கவலைப்படாமல், மற்றைய நாடுகளைப்போலவே, இலங்கை ஜனாதிபதியும் ஈரான் சென்றிருந்தார். அதுவேளை, மற்றைய நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையிலான தொடர்புகளுக்கும், இலங்கையுடனான ஈரானின் உறவுகளுக்கும் இடையில் மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது. இந்த இரு நாடுகளுமே நெருக்கமான உறவைக் கொண்டுள்ளன. அதுவும், அணிசேரா நாடுகளின் கூட்டத்தை ஒரு புதிய உலக ஒழுங்கை உருவாக்குவதற்கு அடித்தளமிட வேண்டும் என்று ஈரானிய ஜனாதிபதியும் இலங்கை ஜனாதிபதியும் ரியோடி ஜெனீரோவில் வைத்துக் கூறுயிருந்ததை அமெரிக்காவினால் இலகுவில் மறந்துவிடவோ ஜீரணித்துக்கொள்ளவோ முடியாது. ஏனென்றால், அந்தப் புதிய உலக ஒழுங்கு என்பது அமெரிக்கா தலைமையிலான மேற்குலகிற்கு எதிரானது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அப்போதே அந்தக்கருத்து மேற்குலகினால் கடும் விசனத்துடன் பார்க்கப்பட்டது. இந்தக் கருத்தை இந்தியாவோ அல்லது இந்தியாவுடன் சேர்ந்து இலங்கையோ சொல்லியிருந்தால் அது கவனத்தில் எடுக்கப்பட்டிருக்காது.

மேற்குலகினால் விரும்பத்தகாத நாடாக முத்திரை குத்தப்பட்டுள்ள ஈரானுடன் இணைந்து வெளியிடப்பட்டதுதான் பிரச்சினை.

மேற்குலகம் அழுத்தம் கொடுக்கிறது என்றவுடன் மேற்குலகிற்கு எதிரான நாடுகளுடன் கைகோர்ப்பதை இலங்கை வழக்கமாகவே கொண்டுள்ளது. முன்னர் லிபியாவுடன் இலங்கை கொண்டிருந்த நெருங்கிய நட்புறவுகூட கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தது. கடைசி நேரத்தில் கடாபியைக் கைகழுவிவிட்டு ஒதுங்கிக் கொண்டதால், மேற்குலக நெருக்கடிகளில் இருந்து இலங்கை தப்பிக்கொண்டது. இப்போது ஈரானுடனான உறவுகளை முற்றிலுமாக முறித்துக்கொள்ள இலங்கை தயாராக இல்லை. இதற்குத் தனியே அரசியற் காரணங்கள் மட்டுமல்ல பொருளாதார ரீதியான காரணமும் உள்ளது.

இலங்கை, ஈரான்மீது கணிசமான அளவிற்கு தங்கியுள்ளது. ஈரானின் மசகு எண்ணெய் இலங்கைக்கு தேவை. இலங்கையின் தேயிலை ஈரானுக்குத் தேவை. இதனால், ஈரானுடனான உறவுகளை முறித்துக் கொள்ளாமல் இருக்கிறது இலங்கை. இலங்கை மீதான மேற்குலகின் விசனங்களுக்கு இதுவும் ஒருகாரணம். அதே வேளை போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வலியுறுத்துவதும், நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் அரசியல்தீர்வை வலியுறுத்துவதும் மேற்குலகின் மீது இலங்கை வெறுப்புக்கொள்ளக் காரணமாகியுள்ளது.

மேற்குலகுடனான உறவுகள் கசந்து போயுள்ள நிலையில் ஈரான் போன்ற மாற்று அணி, ஒன்றுடன் கைகோர்ப்பதை பாதுகாப்பான நகர்வாக அரசாங்கம் கருதுகிறது. இந்தச் சூழலில்தான் ஆபிரிக்கா, தென்னமெரிக்கா பக்கம் அரசாங்கம் புதிதாக இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. அதேவேளை சர்ச்சைக்குரிய-மேற்குலகினால் விரும்பப்படாத நாடுகளுக்கும் இலங்கை தொடர்ந்தும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

அண்மையில் சீனப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியாங்குவாங்லி கொழும்பு வந்தபோது அவரை வரவேற்க பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச செல்லவில்லை. காரணம் அவர் நாட்டிலேயே இருக்கவில்லை. சூடானுக்குச் சென்றிருந்தார். சூடானுடன் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக்கொள்வதற்கான பயணம் அது. இந்தளவிற்கும் சூடான் ஒன்றும் அரசியல்ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ இலங்கைக்கோ அல்லது உலகத்துக்கோ முக்கியமான நாடு அல்ல. அது ஆபிரிக்காவின் ஒருவறிய நாடு. நீண்டகால உள்நாட்டுப்போரால் பாதிக்கப்பட்ட நாடு. அதனுடன் இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்திக் கொள்வதால் எதனைச் சாதிக்கப்போகிறது என்று பலரும் புருவத்தை உயர்த்தினர். ஆனால், இந்தப்பயணம் முக்கியமானது என்பதை பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்சவுடன் சென்றிருந்த குழுவில் இருந்த நபர்களைக் கொண்டே புரிந்துகொள்ள முடிகிறது. இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் தயாரத்நாயக்க, யாழ்.படைத் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, புலனாய்வுப்பணியக பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரண இவர்கள்தான் கோத்தபாய ராஜபக்சவுடன் சூடான் சென்றிருந்தனர். இந்தக் குழுவைக்கொண்டு இது சாதாரணமானதொரு பயணம் என்று கருத முடியாதுள்ளது. சூடானியப் படையினருக்கு பயிற்சிகளை அளிக்க தயாராக இருப்பதாக கூறியுள்ளார் கோத்தபாய ராஜபக்ச. வெளிநாட்டுப் படையினருக்கு பயிற்சியளிப்பதன் மூலம் இலங்கை வருமானம்தேட முனைவதாக ஒருகருத்துள்ளது. அவ்வாறாயின் எதற்காக சூடானை அரசாங்கம் தெரிவு செய்தது என்ற கேள்வி உள்ளது. உள்நாட்டுப் போருக்குப் பின்னர் சூடானிலிருந்து தென்சூடான் பிரிந்து போனாலும் தொடர்ந்து எல்லைப்பகை இருந்துவருகிறது. அண்மையில் உதயமான தென் சூடானுக்கும் நாடுகடந்த தமிழீழ அரசுக்கும் நெருக்கமான உறவுகள் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

நாடுகடந்த தமிழீழ அரசு உறவு வைத்துள்ள தென்சூடானுக்கு எதிரான, சூடானுக்கு இலங்கை பயிற்சி அளிக்க முன்வந்துள்ளதும், பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு கண்டுள்ளதும் இன்னொரு உலக ஒழுங்கிற்கான அடிக்கல்லா என்ற கேள்வியாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

அதேவேளை சூடானின் பாதுகாப் புத்துறை சார்ந்த அதிகாரிகள், அரசியல் தலைவர்களைச் சந்தித்த கோத்தபாஜ ராஜபக்ச சூடான் ஜனாதிபதி ஓமர் அல் பசீரை சந்தித்ததாக தகவல் இல்லை. அவர் டர்பூரில் போர்க்குற்றங்களை இழைத்த குற்றச்சாட்டின்பேரில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருவர். இத்தகைய ஒரு நாட்டுடன் போர்க்குற்ற சாட்டுக்குள்ளான இலங்கையும் நெருக்கத்தை ஏற்படுத்த முனைந்திருப்பது சந்தேகத்திற்குரிய விடயம்தான். சூடானை மேற்கு நாடுகள் வெறுக்கும் நிலையில் சீனாவும் ரஷ்யாவும்தான் அதனைத் தாங்கிப்பிடித்துள்ளன. இந்த நிலையில் சூடானுடன் இலங்கை நட்புறவு கொள்ள அதுவும் இராணுவ ஒத்துழைப்பை விரிவாக்க முனைவது மேற்குலகின் கோபங்களைக் கிளறிவிடும் அதேவேளை அணிசேரா நாடுகளின் மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சந்தித்துப் பேசிய தலைவர்கள் இலங்கைக்கு புதிதாக கைகொடுக்கக் கூடியவர்களாக இல்லை. பங்களாதேஷ் பிரதமர், பாகிஷ்தான் ஜனாதிபதி, லெபனான் ஜனாதிபதி, ஈரான் ஜனாதிபதி ஆகியோரையே இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சந்தித்தார். இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட முக்கியமான தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்ற போதும் அவர்களைச் சந்திக்கவில்லை.

சர்வதேச ரீதியாக உறவுகளைப் பலப்படுத்திக்கொண்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் கூறிக்கொண்டாலும் ஏதோ ஒரு பக்கத்தில் அதன் ராஜதந்திரம் பலவீனப்பட்டுக் கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. அணிசேராக் கொள்கையை இலங்கை கடைப்பிடிப்பதாகக் கூறனாலும் மேற்குலகின்மீதான வெறுப்பைத் தீர்க்க அதற்கு முரணான அணியுடன் இலங்கை சேரத் தொடங்கியுள்ளது. இதன் விளைவுகள் எத்தகையது என்பதை காலம் தான் பதிலளிக்க முடியும்.

தொல்காப்பியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் உண்மையான அமைதியையும் நீதியையும் நிலைநாட்ட நடவடிக்கை எடுங்கள்

## கத்தோலிக்க ஆயர் பேரவை ஜனாதிபதிக்கு அறிக்கை

(கொழும்பு)

தேசிய சட்டவிதிகளுக்கு அமைய சிறைக் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் தொடரும் பல்கலைக்கழகங்களின் போராட்டங்களை முடிவுக்கு கொண்டு வருமாறும் குறிப்பாக தேசிய இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு நாட்டில் உண்மையான அமைதியையும் நீதியையும் நிலை நிறுத்துமாறும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை அரசாங்கத்தையும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் கோரியுள்ளது.

மேற்படி பேரவையின் தலைவர் அதி மேதகு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித், செயலாளர் மேதகு ஆயர் நோபட் அந்திராதி ஆகியோர் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு,

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை கூட்டத்தின் போது எமது சமுதாயத்தில் மனித சமய மதிப்பீடுகள் குறைந்து கொண்டு போவதில் கவனம் செலுத்தப்பட்டது. சிறைக் கைதிகள் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டமை, அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட உடல் உபாதைகள், மரணம் அதுவும் சிறைக்குள்ளேயே இத்தனையும் நடைபெற்றமை வருந்தத்தக்கதாகும்.

சிறைக்கைதிகள் மாண்புடன் கவனிக்கப்பட வேண்டும். அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என தேசிய சட்டம் கூறுகிறது. எனவே இத்தகைய அசம்பாவிதங்களை ஆயர் பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது.

கிறிஸ்தவ விசுவாசத்தின்படி மனிதன் இறை உருவிலேயே படைக்கப்பட்டிருக்கின்றான். ஆதலால் மனிதன் எப்போதும் மரியாதையுடனும் மாண்புடனும் நடத்தப்பட வேண்டும். ஆகவே சிறைக்கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியதும் தேசிய சட்ட விதிகளுக்கமைய அவர்களின் மாண்பைப் பேண வேண்டியதும் அரசாங்கத்தின் பொறுப்பாகவுள்ளது.

நாட்டின் கல்வி நிலை பற்றியும் நாம் ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பரீட்சை நடத்தப்படும் விதத்தில் கடும் அதிருப்தி நிலவுகிறது. எமது பல்கலைக்கழகங்கள் அடிக்கடி மூடப்படுவதால் மாணவர்கள் அதைரியம் அடைகிறார்கள்.


பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும். இந்த பிரச்சினைகளால் பாதிக்கப்படும் மாணவர்களின் நிலையைக் கருதி இது பற்றிய அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்தையும் சம்பந்தப்பட்டவர்களையும் கத்தோலிக்க ஆயர் பேரவை வேண்டிக் கொள்கிறது.

இறுதியாக அரசியல் தீர்வும் முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. நீடிய யுத்தத்தால் துன்பப்பட்ட நாட்டு மக்கள் நிலையான அமைதியை விரும்புகிறார்கள். ஆகவே இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை நாட்டு பிரச்சினைகளைத் தீர்த்து இலங்கை மக்களுக்கு உண்மையான அமைதியையும் நீதியையும் தரும் அரசியல் தீர்வுக்காக உழைக்குமாறு அரசாங்கத்தையும் சம்பந்தப்பட்டவர்களையும் கேட்டுக் கொள்கிறது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## கோப்பாய் கோமானின் 63 ஆவது நினைவு தினம்

கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னிய சிங்கத்தின் 63 ஆவது நினைவு தினமும் நற்பணி மன்ற தொடக்க விழாவும்இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோப்பாய் கிளைத்தலைவர் சி.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நினைவுரைகள், நற்பணி மன்ற நிர்வாகிகள் அறிவிப்பு என்பன நடைபெறவுள்ளதாக கோப்பாய்த் தொகுதி வன்னியசிங்கம் நினைவு விழாக்குழு அறிவித்துள்ளது. (அ-9)



யுத்த வீரர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை கையளிக்கும் வைபவம் திவுலப்பிட்டிய சி. டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இராணுவ வீரர் ஒருவருக்கு வீட்டின் திறப்பினை கையளித்திருப்பதைப் படத்தில் காணலாம்.

## "சுணைக்கேடு" ஒரு பார்வையாளனின் மனப்பதிவுகள்

நான்கு நாடக மாந்தர்: மேடையில் தோன்றுபவர் மூவரே. நான்காமவர் மேடையில் தோன்றாத புறக்குரல். மேடையில் தோன்றும் மூவரும் பதின்ம வயது நவநாகரிகப் பெண்கள் : (1) 16 வயது பெட்ரா (Petra)

2. 17 வயது மரேன் (Maren) (3) 17வயது லில்லி (Lilly)

ஒரு தொலைக்காட்சி நிறுவனம் தனது நவநாகரிக இசை நிகழ்ச்சி ஒன்றுக்கு ஒருங்கிணைப்பாளர் ஒருவரைத் தெரிவு செய்யவுள்ளதாக நம்பிக்கையூட்டி இறுதித் தேர்வுக்காக நேரில் வருமாறு மூன்று இளம் பெண்களை அழைத்துள்ளது. இப்பெண்கள் மூவரும் தம்மைப் பற்றி பதிவு செய்துள்ள குறு வீடியோப் பதிவுகளை (video Clips) அனுப்பியுள்ளனர். திரைவிலகியதும் மேடையின் பின்புறம் உள்ள திரையில் மூன்று பெண்களினதும் குறு வீடியோப் பதிவுகள் ஒன்றன்பின் ஒன்றாகக் காண்பிக்கப்படுகின்றன. இதன் பின்னரே முதலாவது பாத்திரம் (பெட்ரா) மேடைக்கு வருகிறாள்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் கூடம் (Studio) போன்று மேடை அமைக்கப்பட்டுள்ளது. அங்கு வருபவர்களை வரவேற்கத் தொலைக்காட்சி நிறுவனத்தினர் எவரும் இல்லை. கமெரா ஏதும் அங்கு இல்லை. முதலாவதாக மேடைக்கு வரும் பெட்ரா தனக்குத்தானே கதைப்பது போன்று நாடக அளிக்கை ஆரம்பமாகிறது.

பெட்ராவிற்குப் பின் மரேன் வருகிறாள். அதன் பின்னர் லில்லி வருகின்றாள். மூவரும் தமக்குள் கதைக்கும் கதைகள் மூலம் கதையின் கரு அவிழ்ந்து வளரத் தொடங்குகிறது.

திடீரெனத் தொலைக்காட்சி நிறுவனப் பிரதிநிதியின் குரல் கேட்கிறது. மூன்று பாத்திரங்களையும் தங்கள் ஆற்றல்களைக் காட்டுமாறு புறக்குரல் கேட்கிறது. அவர்களை நோக்கி மேலே பொருத்தப்பட்டுள்ள கமராவைப் பார்த்து அவர்கள் தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்த வேண்டும் எனவும் புறக்குரல் பணிக்கிறது.

புறக்குரலின் (ஆதரவான) வழிகாட்டலுடன் மூன்று கதை மாந்தரும் தமது திறமைகளை வெளிப்படுத்த முயல்கின்றனர். இதன் விளைவாக அவர்களுடைய போட்டித் தன்மை குரூரமாக வெளிப்பட்டு ஒருவரை ஒருவர் மனம் புண்படும்படி நடந்து கொள்கின்றனர். இதன் மூலம் நாங்கள் வாழ்வது ஒரு குரூரமான அரக்கத்தனமான கழுத்தறுப்புப் போட்டிச் சமுதாயம் (rat race society) என்பதை நாடகாசிரியர் மென்மையாக ஆனால் ஆழமாகக் காட்டுகிறார்.

மூன்று யுவதிகளும் தம்மை மட்டுமே முதன்மைப்படுத்துவதற்காக- மிருகத்தனமாக ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வதைக்காட்டும் நாடகாசிரியர் உடனடியாகவோ அல்லது சிறிது போது கழித்தோ அவர்கள் தங்கள் செயல்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்பதாகவும் காட்டுகிறார்.

இதன்மூலம் எமது கழுத்தறுப்பு போட்டிச் சமூகத்திலும் *மனிதம்* (முக்கியமாக) வாழ்வில் துன்பங்களை அனுபவிக்கும் சாதாரண மானுடரிடம் இன்னும் இருப்பதை நாடகாசிரியர் காட்டுகிறார்.



மூன்று யுவதியரின் போட்டித் தன்மையைத் தூண்டியும் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையின் அல்லல்களைப் புட்டுக்காட்டி அவர்களை நிதானமிழக்கச் செய்வதன் மூலம் அவர்கள் தாங்கள் சொல்ல விரும்பாத விடயங்களை வெளிக்கொண்டு வரவும் புறக்குரல் இயங்குகிறது.

இதன்மூலம் அந்த யுவதியரின் அவலங்கள் வெளிக்கொணரப்படுகின்றன. இவையெல்லாம் வீடியோவில் பதிவு செய்து அந்த தொலைக்காட்சி நிறுவனம் தனது நிகழ்ச்சிகளில் ஒன்றாக காட்டி பணம் பண்ணப் போகிறது என்பதே நாடகத்தின் மூலக்கரு. இதன்மூலம் சமுதாயத்தில் உள்ள ஆதிக்க சக்திகளிடம் *மனிதம்* அழிந்து இரக்கமற்ற குரூரம் மேலோங்கியுள்ளதை நாடகாசிரியர் காட்டுகிறார். நாடகத்தின் அடிப்படைச் செய்தியே இதுதான். இது எவ்வித பிரசாரவாடையும் இன்றித் தெரிவிக்கப்பட்டுள்ளமை நாடகத்தினதும் நாடக ஆசிரியரதும் கலைத்துவ வெற்றியாகும்.

உலகின் ஒவ்வொரு நாட்டிலும் வேலையில்லாத் திண்டாட்டத்தில் வாழ்கின்ற வாழ்க்கையில் நம்பிக்கையிழந்து விரக்தியுடன் வாழ வேண்டி நிர்ப்பந்திக்கப்படுகின்ற இளைஞர்கள் போலிப்பகட்டுள்ள தொலைக்காட்சி/ திரைத்துறை/ விளம்பர உலகில் தாங்கள் சேர்ந்து விட்டால் வாழ்வே சொர்க்கம் என்று எண்ணிச் செயற்படுவதையும் இந்த நாடகம் தெளிவாகக் காட்டுகிறது. ஜேர்மன் மொழி நாடகமாயினும் உலகில் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள நிலைமையை எந்த நாட்டுக்கும் பொருந்தக் கூடிய விதமாக நாடகம் எழுதப்பட்டிருப்பதை நாடகம் தெளிவாகக் காட்டுகிறது. நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்த குழந்தை ம.சண்முகலிங்க மும் நெறிப்படுத்திய தேவநாயகம் தேவானந்தும் நாடகத்தை யாழ்ப்பாண மயப்படுத்த முயலவில்லை.

மூலத்துக்கு விசுவாசமாக இருந்துள்ளனர். இதுதான் மொழிப்பெயர்ப்புக் கலைஞர் பின்பற்ற வேண்டிய அடிப்படை ஒழுக்க விழுமியம். இது பாராட்டுக்குரியது. எனினும் தமிழ் மொழியில் நாடகம் இருப்பதாலும் கதை மாந்தர் உலகின் எந்த நாட்டுக்கும் பொருந்தக் கூடியவர்களாகப் படைக்கப்பட்டிருப்பதாலும் ஒரு தமிழ் நாடகத்தைப் பார்க்கும் அனுபவம் பார்வையாளருக்கு கிட்டியது.

மொழிப்பெயர்ப்பு நாடகம் என்று எண்ண முடியாத இயல்பான தமிழாக்கம். தமிழ் நாடகமாகவே அளிக்கப்பட்டிருக்கும் நெறியாள்கை. துருத்திக் கொண்டு நிற்காத தேவைக்கேற்ற அரங்க உத்திகள். மூன்று யுவதியரினதும் இயல்பான நடிப்பு. பலன்- ஒரு சிறப்பான, பாராட்டப்பட வேண்டிய, பெருமைப்படக் கூடிய நாடக ஆற்றுகை. இந்நாடகம் பல தடவைகள் பல இடங்களில் குறிப்பாகப் பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் அளிக்கை செய்யப்பட வேண்டிய நாடகம்.

குழந்தை ம.சண்முகலிங்கம், தேவநாயகம் தேவானந்த், அனோஜா, மரீன், துவாரகி நாடகத்துக்காக உழைத்த அனைவருக்கும் நன்றியும் பாராட்டுக்களும்.

He's a creep என ஆங்கிலத்தில் கூறுவதை அவன் ஒரு *சுணைகெட்ட பயல்* என்று தமிழில் கூறலாம். நாடகத்தில் வரும் தொலைக்காட்சி நிறுவனத்தினன் (புறக்குரல்) நாடக மாந்தரான மூன்று யுவதிகளையும் *சுணைகெட்டவர்கள்* என்று அழைக்கிறான். ஆனால் அவனும் அவனைப் போன்றவர்களும் இவ்வுலகை இயக்கும் சக்திகளும்தான் உண்மையில் சுணைகெட்டவர்கள் என நாடகம் காட்டுகிறது. நாடகத்தில் வரும் தொலைக்காட்சியின் குறிப்பிட்ட இசை நிகழ்ச்சியின் பெயரும் *சுணைக்கேடு* தான்! என்ன சுணைக்கேடு? எனவே *சுணைகெட்டவர்கள்* என்ற நாடகப் பெயரை *சுணைக்கேடு* எனக் குழந்தை ம.சண்முகலிங்கம் மாற்றியிருப்பதில் அழகும் அர்த்தமும் இருக்கிறது.

*சண்முகம் -முத்துலிங்கம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

222

## இலங்கை பிறந்த கதை!


பூமியில் மானிடர்களும் சொர்க்கத்தில் தேவர்களும் வாழ்கிறார்கள். உயிரோடு இருக்கும் மனிதர் சொர்க்கத்திற்குச் செல்ல முடியாது.

ஆனால் மிகப்பழைமையான காலத்தில் தாங்கள் விரும்பும் போது தேவர்கள் பூமிக்கு வருவதும் மனிதர்கள் சொர்க்கத்திற்கு சென்று வருவதும் சர்வ சாதாரணமாக இருந்தது.

நாரதமுனிவர் திரிலோக சஞ்சாரியாக எல்லா இடங்களிலும் சுற்றிக்கொண்டிருப்பார். ஒரு நாள் நாரதர் சொர்க்கத்தில் உள்ள வாயுதேவனின் இருப்பிடத்திற்குச் சென்றார். அவரைக் கண்ட வாயுதேவன் வணங்கி வரவேற்று உபசரித்தார். மாளிகையின் சாளரங்கள் திறந்தே இருந்தன.

சாளரங்களுக்கு வெளியே சற்றுத் தொலைவில் ஒரு குன்று இருந்தது. அதனால் குன்றுக்கு அப்பாலுள்ள காட்சி என்ன என்பது தெரியவில்லை.

நாரதர் வாயுதேவனிடம் நீ மிகப் பெரும் வல்லமை வாய்ந்தவன். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கக்கூடியவன். நீ போக ஆரம்பித்தால் வழியில் உள்ள மலைகள்கூட தவிடு பொடியாகும். உன்னால் வீழ்த்த முடியாததே இல்லை. உன் வீட்டுச் சாளரத்தின் வழியாகத் தெரியும் இந்தச் சின்னஞ் சிறு குன்றை உன்னால் வீழ்த்த முடியாதா? என்று



கேட்டார்.

உடனே எழுந்த வாயு பகவான் நாரதரே! நீங்கள் இங்கேயே இருங்கள். இப்போதே அந்தக் குன்றை மோதித் தள்ளி விட்டு வருகிறேன் என்று கூறி விட்டு கம்பீரமாகக் குன்றை நோக்கிச் சென்றான். குன்றின் அருகில் சென்றதும் ஒரே மோதாய் அதனை மோதினான். ஆனால் குன்று சிறிதும் அசையாமல் உறுதியாக இருந்தது. பலமுறை கடுமையாக மோதிப்பார்த்தும் குன்று அப்படியே அசையாமல் இருந்தது. இதுபோன்ற தோல்வியை இதுவரை அவன் அடைந்ததில்லை. அதனால் மிகவும் அதிர்ச்சியடைந்தான். மேனியெங்கும் வியர்வை வழிந்தது தான் மிச்சம்.

நடப்பவற்றையெல்லாம் சாளரத்தின் வழியாகப் பார்த்துக்கொண்டேயிருந்தார் நாரதர். மனதிற்குள் சிரித்துக் கொண்டார். அந்தக் குன்றின் உச்சியில் கருடன் ஒன்று அமர்ந்து தனது இரு இறக்கைகளையும் விரித்து அந்தக்குன்றைக் கெட்டியாகக் பிடித்துக் கொண்டிருந்தது.

நாரதர் உரத்த குரலில் வாயுதேவனே! கொஞ்சம் பொறு. திரும்பத்திரும்ப அந்தக் குன்றை மோதுவதால் ஒரு பலனும் இல்லை. அதோ அந்தப்பறவையைப் பார். அதுதன் இறக்கைகளின் பிடிப்பைத் தளர்த்தினால் ஒழிய உன்னால் குன்றை வீழ்த்தவே முடியாது என்று கூறினார்.

இதனைக்கேட்ட வாயுதேவன் மிகுந்த குழப்பமடைந்தான். மிகவும் அற்பமான ஒரு பறவை என்னைவிட பலசாலியாக இருப்பதா? அதனை அவனது மனம் ஏற்றுக் கொள்ள வில்லை. வாயுதேவன் கருடனைப் பார்த்துக்கொண்டே பேசாமல் நின்றான்.

வாயுதேவனின் வேகம் தணிந்து விட்டது என்று கருடன் நினைத்துக் கொண்டது. அதனால் அங்கிருந்து பறந்து செல்வதற்காக தனது இறக்கைகளைக் கொஞ்சம் தளர்த்தியது.

உடனே வாயுதேவன் ஒரே மூச்சில் முன்னால் பாய்ந்து குன்றின் மீது வேகமாக மோதினான். குன்று இரண்டாக உடைந்தது. அதன்மேல் பகுதியாகிய பாதிக் குன்று பறந்து போய்க் கடலில் விழுந்தது. கடலில் விழுந்த துண்டு மிகப் பெரிதாக இருந்தால் தண்ணீரில் முழுவதுமாக முழுகவில்லை.

அதன் ஒரு பகுதி நீர்மட்டத்திற்கு வெளியே தெரியும்படி நின்று கொண்டிருந்தது.

அதுதான் இந்தியாவின் தெற்கேயுள்ள இலங்கைத்தீவு என்று கூறப்படுகிறது.

## ஈகை வேண்டாத நாடு!

பஞ்சபாண்டவர்களில் தலைமகனான தர்மபுத்திரர் கருணையே வடிவானவர். எவர் வந்து எது கேட்டாலும் இல்லை என்ற சொல்லுக்கே இடமில்லாமல் வாரி வாரி வழங்குபவர். நாளாக நாளாக தன்னைப் போல் ஈகையாளர் தரணியில் இருக்கமுடியாது என்ற எண்ணம் அவர் மனதில் படியத் தொடங்கியது.

இதனைக் கண்ணபிரான் உணர்ந்து கொண்டார். அத்தகைய அகந்தை தனது நண்பனுக்கு ஏற்படவே கூடாதென்று எண்ணினார். அந்த அகந்தையை மாற்ற முடிவு செய்தார். அந்த காலகட்டத்தில் பாதாள உலகத்தை *மகாபலி* என்ற மன்னன் சிறப்பாக ஆட்சி புரிந்து வந்தான்.


வார்த்தைகளால் வர்ணிக்க இயலாத அளவிற்கு நாட்டைச் சுபீட்சமாக மகாபலி வைத்திருந்தான். ஈகையிலும் விருந்தோம்பலிலும் அவனுக்கு நிகர் எவருமில்லை. ஆனால் மிகுந்த அடக்கமும் நற்பண்புகளும் நிறைந்தவன்.

கண்ணபிரான் தர்மபுத்திரரை வெளியில் சென்று வருவோமென்று அழைத்தார். அவரும் சம்மதிக்க இருவரும் புறப்பட்டு பாதாள உலகத்தை அடைந்தனர். மகாப்லி அரசனின் தலைநகருக்குள் நுழைந்தனர். தெருக்களைச் சுற்றிவந்தனர்.

அப்போது தர்மபுத்திரருக்கு தாகம் ஏற்பட்டது. எனவே அருகேயிருந்த வீட்டிற்கு கண்ணபிரானும் தர்மபுத்திரரும் சென்றனர். தர்மபுத்திரர் அந்த வீட்டில் தண்ணீர் கேட்டார். அந்த வீட்டுப் பெண்மணி பொற்செம்பு ஒன்றில் நீரைக்கொண்டு வந்து கொடுத்தார். நீரை அருந்திய பின் தர்மர் பெண்ணே! மிக்கநன்றி. தாங்கள் தண்ணீர் கொடுத்த பாத்திரம் தங்கத்தாலானது. எனவே அதனைப் பத்திரமாகக் கொண்டு போய் வைத்து விடுங்கள் என்றார். கண்ணனோ மனதிற்குள் சிரித்துக்கொண்டே நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

அந்த வீட்டுப்பெண்மணி ஐயா ஒருவரிடம் ஒருமுறை கொடுத்ததை அது எவ்வளவு விலையுயர்ந்த பொருள் எனினும் திரும்ப வாங்கும் பழக்கம் எங்கள் நாட்டில் கிடையாது. நாங்களும் ஒரு முறை பயன்படுத்தியதை மறுமுறை பயன்படுத்தாமல் வீசி எறிந்து விடுவோம் என்று கூறினாள். இதனைக்கேட்ட தர்மபுத்திரர் அடைந்த வியப்பிற்கு அளவேயில்லை. அந்தநாடு எத்தகைய செல்வம் கொழிப்பது என்பதைப் புரிந்து கொண்டார்.

கண்ணபிரானும் தர்மபுத்திரரும் அங்கே அப்பெண்மணியிடம் விடை பெற்றுக்கொண்டு மகாபலியின் அரண்மனையை அடைந்தனர்.



இருவரும் மகாபலியின் அவைக்குச் சென்றனர். அவர்களை மகாபலி மிகவும் வணங்கி வரவேற்று உபசரித்து ஆசனத்தில் அமரச் செய்தான். கண்ணபிரான் மகாபலி மன்னனே இன்று உனது அவைக்கு தான தருமங்களில் வல்லவரான தர்மபுத்திரரை அழைத்து வந்திருக்கிறேன். தினமும் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு வாரி வழங்கக்கூடியவர் என்று தர்மபுத்திரரை அறிமுகப்படுத்தினான்.

கேள்விப்பட்டிருக்கிறேன் கண்ணபிரானே! அவர் வாரி வழங்குகிறார். ஆனால் நான் எவ்வளவோ முயற்சிகள் செய்தும் என்னிடம் தானம் பெற ஒருவருமேயில்லை. இங்கே கொள்வாரில்லை. கொடுப்பதற்கும் வாய்ப்பில்லை.

தாங்களோ தர்மபுத்திரரிடம் தினமும் எண்ணற்றவர்கள் தானம் பெறுகிறார்கள் என்று கூறுகிறீர்கள். அப்படியானால் அந்த நாட்டில் எண்ணற்றோர் வறுமையில் வாடுகிறார்கள் என்பது புரிகிறது.

அதனால் அவருடைய ஆட்சி எப்படிப்பட்ட பரிதாப நிலையில் உள்ளது என்பதும் தெளிவாகப் புரிகிறது.

அப்படிப்பட்டவரைப் பற்றி நான் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமே இல்லை என்றார் மகாபலி. இதனைக் கேட்ட தர்மபுத்திரர் வெட்கித் தலை கவிழ்ந்தார்.

இந்த நிகழ்ச்சியின் மூலம் தர்மபுத்திரர் மனதில் இலேசாக ஏற்பட்டிருந்த அகந்தை அடியோடு அழிந்தது. அதற்காகத் தானே கண்ணபிரான் தர்மபுத்திரரை மகாபலியின் நாட்டிற்கு அழைத்துச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத இராசி பலன்

## 17.09.2012 - 16.10.2012



## மேடம்

அச்சுவினி , பரணி, கார்த்திகை
1ஆம் பாதம்

**பயணங்களால் பலன் கிடைக்கும்!**

**நகைச்சுவை உணர்வும், நாகரிக போக்கும் கொண்ட மேட ராசி நேயர்களே!**

## எடுத்த காரியத்தை எளிதில் முடித்து மகத்தான வெற்றி காண்பீர்கள்

உங்கள் குடும்பத்தைப் பற்றி பெருமை கொள்வீர்கள். விருந் தளிப்பதில் வல்லவர்கள். மற்றவர் களை நேருக்கு நேராக புகழ மாட்டீர்கள். ஆடம்பரச் செலவுகளை குறைத்துக் கொண்டு, சேமிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று மற்றவர்களுக்கு எடுத்துரைப்பீர்கள். உணர்ச்சிவசப்படுபவர்களுக்கு மத்தியில் சுயகட்டுப்பாடு மிக்கவர்களாக இருப்பவர்களும் நீங்கள்தான்.

உங்களுக்கு இந்த புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் செவ்வாய் இராசியைப் பார்ப்பது யோகம்தான். முதல் பத்து நாட்கள் முன்னேற்றத் தின் முதல்படியில் இருப்பீர்கள். அடுத்த பத்து நாட்கள் காசு- பணப் புழக்கம் அதிகரிக்கும் சூழ்நிலை யோடு வாழ்க்கை நடத்துவீர்கள்.

செவ்வாய், சனி சேர்க்கை ஏற்படு வது அவ்வளவு நல்லதல்ல என்ப தால், தெளிவான மனநிலையோடு செயற்படுவது நல்லது. மாதத்தொடக் கத்திலேயே புத ஆதித்ய யோகமும், குரு சந்திர யோகமும் இருக்கிறது. எனவே, கல்விச் செல்வமும், பொருட் செல்வமும் திருப்தி அளிக்கும் விதத்தில் அமையும். சகோதர பாசம் கூடும்.

நாலில் சஞ்சரிக்கும் சுக்கிரனின் ஆதிக்கத்தால் பயணங்கள் அதிகரிக் கும். வாகன மாற்றம் செய்ய முன்வரு வீர்கள். மாற்று மருத்துவத்தால் தேக நலனை சீராக்கிக் கொள்ளலாம். உச்ச புதனின் ஆதிக்கம் உங்களுக்கு ஒரு வகையில் நன்மையைச் செய்தாலும், எதிரிகளின் பலத்தை அதிகரிக்கச் செய்யும். எனவே, அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்லுங்கள். கோபத்தைக் குறைத்துக் கொள் ளுங்கள். சனி, செவ்வாய் சேர்க் கைக்குப் பரிகாரமாக அங்கார கனுக்கும், சனீஸ்வரனுக்கும் அர்ச் சனை செய்துவழிபட்டால் மன அமைதி கிடைக்கும். மாற்று கருத்து டையோரின் மனமும் மாறும்.

**விருச்சிக செவ்வாயின் சஞ்சாரமும் துலாம் புதனின் பெயர்ச்சி காலமும்**

செப்ரம்பர் 27 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அதே நாளில் துலாம் இராசிக்கு புதன் செல்கிறார். ஒன்றன் பின் ஒன்றாகச் செல்லும் இந்த கிரகங்களின் பெயர்ச் சியால் உடல் ஆரோக்கியத்திற்காக செலவிடும் சூழ்நிலை ஏற்படலாம். பழைய கடன்களை அடைக்க புதிய கடன்களை வாங்கும் அமைப்பு ஒரு சிலருக்கு உருவாகலாம். உடன்பிறப் புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்களா என்பது சந்தேகம் தான். உத்தியோகம் சம்பந்தமாக திடீர் மாற்றங்கள் ஏற்படலாம்.


**சிம்ம சுக்கிரனின் சஞ்சாரமும் ரிஷப குருவின் வக்ரமும்**

சிம்ம இராசிக்கு சுக்கிரன் செப்ரம் பர் 28 ஆம் திகதி வருகிறார். எனவே, புத்திர ஸ்தானம் வலுவடைகிறது. பெண் குழந்தைகள் வழியில் சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும். பூர்வீக சொத்துக்களில் இருந்த தகராறுகள் அகலும். 9-12 க்கு அதிபதியான குருவின் வக்ர நிவர்த் தியால் நீண்டதூர பயணங்களில் இருந்த தடைகள் அகலும். மாதக் கடைசியில் கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். மாற்றினத்தவரின் ஒத்துழைப்போடு செய்யும் கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் அங்காரகனையும், சனிக் கிழமைதோறும் சனீஸ்வரரையும் வழிபட்டு வருவது நல்லது.

இம்மாதம் உடன்பிறப்புகள் வழியில் அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயம் கிடைக்கும். அரசியல் ஈடுபாடு கொண்டவர் களுக்கு பொறுப்புக்கள் மாறலாம். குடும்பச்சுமை கூடும். கணவன்-மனைவிக்குள் அந்நியோன்னியம் அதிகரிக்க விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. பிறரைப் பற்றிய விமர்சனங்களை குறைத்து கொள் ளுங்கள். வீடு, இடம் சம்பந்தமாக எடுக்கும் முடிவுகளை பெரியோர் களின் ஆலோசனைப்படி செய்வது நல்லது. பிள்ளைகளை கண்காணித்துக் கொள்வதன் மூலம் பிரச்சினைகளி லிருந்து விடுபடலாம்.

## ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## இடபம்

கார்த்திகை, 2,3,4 ஆம் பாதங்கள்
ரோகிணி, மிருகசீரிடம்
1,2 ஆம் பாதங்கள்

**யோகங்கள் ஆரம்பமாகும் நேரம்!**

**தன்னை நம்பி வந்தவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுபவர்களாக விளங்கும் இடப இராசி நேயர்களே!**

## கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் திருப்தி அளிக்கும் விதத்தில் அமையும்

மலர்ந்த முகத்துடன் காட்சியளிப் பவர்கள் நீங்கள். மணிக்கணக்காக பேசினாலும் உங்களுக்கு சலிக்காது. துணிந்து ஒரு காரியத்தை செய்து விட்டு நம்மால் எப்படி இந்த காரியத்தை செய்ய முடிந்தது என்று ஆச்சரியப்படுவீர்கள். ஆதாயத்தை கருதி வேலை பார்ப்பவர்களுக்கு மத்தியில் அன்பைக் கருதி வேலை பார்ப்பவர்கள் நீங்கள், கடமை உணர்வு மிக்கவர்களின் பட்டியலில் முதலிடம் வகிப்பீர்கள்.

உங்களுக்கு இந்த புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஜென்ம இராசியில் கேது, ஏழில் இராகு இருந்து சர்ப்ப தோஷத்தை உரு வாக்குகின்றார்கள். இராசிநாதன் சுக்கிரன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகலாம். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேர்ந்து 'பலவித நன்மைகளைச் செய்வர்.

சந்திர, சூரிய சேர்க்கையும் உச்ச புதனின் ஆதிக்கமும் இருப்பதால் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். எடுத்த காரியத்தை எளிதில் முடித்து வெற்றி காண்பீர்கள். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்றுவரும் வாய் ப்பு கிட்டும். புகழ் கூடும். பொன் னான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள கண்ணியம் மிக்க நண்பர்கள் உங்களுக்கு கைகொடுத்து உதவுவர்.

அந்நிய இனத்தார், மதத்தார் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன் வருவர். ஆயினும், 6 இல் செவ் வாய், சனி கூடியிருப்பதால் ஜீவன ஸ்தானம் பலம் இழக்கிறது. எனவே, உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல் வது நல்லது. தொழில் செய்பவர்கள் கூட்டாளிகளின் குணத்தை அறிந்து நடப்பது நல்லது. அம்பிகை வழி பாட்டில் ஆர்வம் காட்டுங்கள். தங்குதடைகள் அகலும்.

**விருச்சிக செவ்வாயும் துலாம் புதனும்**

விருச்சிக இராசியில் செவ்வாய் செப்ரம்பர் 27 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாகவும், துலாம் இராசியில் புதன் அதே திகதியில் சஞ்சரிப்பதன் விளைவாக வும் பணப் புழக்கம் அதிகரிக்கும். மறைந்த புதன் நிறைந்த தன இலாபத் தைக் கொடுக்கும். அங்காரகனின் பார்வையால் ஆற்றல் பளிச்சிடும். செயற்பாடுகளில் தீவிரம் காட்டு வீர்கள். சொத்து விற்பனையால் இலாபங்களும்,சொந்த பந்தங்களால் மேன்மையும் உருவாகும். வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும் நேரமிது.

**சிம்ம சுக்கிரனின் சஞ்சாரமும் இடப குருவின் வக்ரமும்**

சுக்கிரன் சிம்ம இராசியில் சஞ்சரிப் பது யோகம் தான். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். தங்கம், வெள்ளி போன்றவைகள் வாங்கிச் சேர்க்க வேண்டுமென்ற எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். குருவின் வக்ர இயக்கமும் மிகுந்த யோகத்தைக் கொடுக்கும். இழப்புக்களை ஈடு செய்ய வரும் வாய்ப்புக்களை உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். பழைய வாகனங்களைப் பழுது பார்க்கும் வாய்ப்பு ஒரு சிலருக்கும் புதிய வாகனங்களை வாங்கி மகிழும் வாய்ப்பு ஒருசிலருக்கும் உருவாகும்.

இம்மாதம் குரு தெட்சணா மூர்த்தியையும் சனிக்கிழமை தோறும் அனுமனையும் வழிபாடு செய்வது நல்லது.

இம்மாதம் வக்ர குருவின் இயக் கத்தால் திடீர் மாற்றங்கள் உருவாக லாம். தித்திப்பான செய்திகள் வந்துசேரும். பாதியில் நின்ற பணியை மீதியும் தொடருவீர்கள். போதுமான அளவிற்கு பொருளாதார நிலை இருக்கும் என்பதால், விலை யுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். கணவன்-மனைவிக்குள் கனவு கூடும். உடன பிறப்புகள் எதிரியாகலாம். ஊர்மாற் றச் சிந்தனைகளை தவிர்ப்பது நல்லது. நந்தி வழிபாடு நலம் சேர்க்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவே அரசாங்கத்துடன் இணைந்திருக்கின்றேன்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கிலிருந்து படைத்தரப்பு குறைக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதியை சந்திக்கின்ற போதும் வலியுறுத்தி வருகின்றேன். அதற்கு ஜனாதிபதியும் இணங்கியுள்ளார் என பாரம்பரியகைத்தொழில்கள் மற்றும்சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். வடக்கிலிருந்து படைத்தரப்பை குறைக்க வேண்டும் என தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக் கூறியுள்ளார். இது தவிர வெளிநாட்டு பிரதிநிதிகளிடமும் பல தடவைகள் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் வடக்கிலிருந்து படைகளைக் குறைக்க தமிழ் அமைச்சர் என்ற ரீதியில் ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளார்கள் எனக் கேட்ட போதே அவர் வலம்புரிக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினை கொழும்பில் சந்திக்கும் போதும் இங்கு அவர் வருகின்ற போதும் தமிழ் மக்களின் நிலைமைகளை எடுத்துக் கூறி வருகின்றேன்.

குறிப்பாக வடக்கிலிருந்து படைகளை குறைப்பது தொடர்பில் வலியுறுத்திவருகின்றேன். அதற்கு ஜனாதிபதியும் இணங்கியுள்ளார்.

ஆனால் இங்கிருந்து படைகளை குறைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு விருப்பம் இல்லை. கொந்தளிப்பான ஒரு சூழலை வைத்திருக்க அவர்கள் விரும்புகின்றனர்.

இருப்பினும் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்னர் கணிசமான அளவு இராணுவப் படைகள் குறைக்கப்பட்டுள்ளன.

உயர் பாதுகாப்பு வலயங்கள் விடுவிக்கப்பட்டு மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

தென்னிலங்கையில் உயர்பாதுகாப்பு வலயம் என்று ஒன்றில்லை. அந்த நிலை வடக்கு மாகாணத்திற்கும் வரும். ஆனால் பாதுகாப்பதற்காக தென்னிலங்கையில் படை முகாம்கள் உள்ளன.

அதேபோன்று வடக்கிலும் பாதுகாப்பிற்காக இராணுவ முகாம்கள் இருக்கலாம்.

மேலும் இந்த நிலைக்கு யார் காரணம் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எல்லை ஓரமாக இருந்த இராணுவ முகாம்களை மக்கள் வாழும் பிரதேசங்களுக்குள் கொண்டுவர கடந்த கால தவறான அரசியல் தலைமைகளே காரணம்.

இராணுவ படைகள் நிலை கொண்டிருக்க வேண்டும். மக்களுக்கு தொடர்ந்து பிரச்சினைகள் இருக்க வேண்டும். அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாத பிரச்சினைகளாக மாற்றப்பட வேண்டும் என எண்ணுபவன் அல்ல நான். பத்திரிகைகளில் இராணுவப் படைகள் வெளியேற வேண்டும் என அறிக்கைகள் விடுத்துவிட்டு பின்புறமாக சென்று அவர்களுடன் உறவு கொண்டாடுகின்றனர்.

ஆனால், அரசாங்கத்துடன் இணைந்து இருப்பதன் ஊடாக மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியும் என்பதற்காக மக்களின் நலனுக்காக அரசாங்கத்துடன் இணைந்துள்ளோம்.

எனவே, வடக்கிலிருந்து இராணுவப் படைகள் படிப்படியாக குறைக்கப்பட்டு மீள்குடியேற்றம் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## கலந்துரையாடல்

(வேலணை)

திறந்த பாடசாலை அலகினால் யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்தில் நடைபெற்றுவரும் பயிற்சி நெறிகளுக்கான சான்றிதழ் வழங்கல் தொடர்பான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் திறந்த பாடசாலையின் பயனாளிகள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொண்டு தங்கள் ஆலோசனைகளை வழங்குமாறு தீவக கல்வி வலயப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஸ்ணன் அறிவித்துள்ளார்.(அ-9)

# செஞ்சிலுவைச்சங்கத்தை இராணுவம் பழிவாங்கியது

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

இலங்கை இராணுவப் படையினர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை பழிவாங்கியதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு குறிப்பிட்டது என விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் நிலவி வரும் உறவு தொடர்பில் அப்போதைய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரொபேட் ஓ பிளேக் வருத்தமடைந்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை இலங்கை இராணுவத்தினர் பழிவாங்கி வருவதாக ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரின் மனிதாபிமான விவகார பிரதிநிதி ஜோன் ஹோல்ம்ஸ் தெரிவித்ததாக குறிப்பிடப்படுகின்றது.

செஞ்சிலுவைச் சங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதாக கருதியே படையினர் இவ்வாறு செஞ்சிலுவைச் சங்கத்திற்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர் என அவர் குறிப்பிட்டதாக தெரிய வருகின்றது.

உதவிகளைத் தொடர்ந்தும் வழங்க விரும்புவதாகவும் தேவையில்லையென்றால் குறித்த பிரதேசங்களைவிட்டு வெளியேறத் தயார் எனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் குறிப்பிட்டிருந்தது.

10 ஆயிரம் தொடக்கம் 15 ஆயிரம் விடுதலைப்புலிச் சந்தேக நபர்களின் உரிமைகள் தொடர்பில் கவனம் செலுத்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒத்துழைப்பு அவசியம் என மற்றுமொரு ஐக்கிய நாடுகள் உயரதிகாரியான லியான் பெஸ்கோ தெரிவித்திருந்தார்.

2009 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதி இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தினால் இந்த குறிப்பு அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-2)



தும்பிக்கையுடன் பிறந்த அதிசய நாய்...

திருகோணமலை மாவட்டம் முருகாபுரியில் நாய்க்குட்டியொன்று முகத்தில் தும்பிக்கை போன்ற வடிவத்துடன் அதிசயமாகப் பிறந்துள்ளதைப் படத்தில் காண்கிறீர்கள். இந்த அதிசயநாய் சில மணித்தியாலத்தின் பின்னர் உயிரிழந்துள்ளது.

# ரஷ்யாவில் புடினுக்கு எதிராக ஒரு இலட்சம் பேர் திரண்டனர்



ரஷ்யாவில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் புடின் வெற்றி பெற்று புதிய ஜனாதிபதியாக பதவியேற்றார். அதில் முறைகேடு நடத்தப்பட்டு புடின் ஜனாதிபதியாக வெற்றி பெற்றார் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

எனவே, புடின் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி போராட்டங்களை நடத்தி வருகின்றனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கிறிஸ்தவ தேவாலயத்தில் புடினுக்கு எதிராக பாடல்களை பாடி பிரசாரம் செய்த பெண் பாடகர் குழுவினர் கைது செய்யப்பட்டனர். இருந்தும் போராட்டம் ஓயவில்லை.

போராட்டத்தில் ஈடுபடுவர்களுக்கு கடுமையான அபராத தொகை விதிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகள் ஜனாதிபதி புடின் மீதான எதிர்ப்பை அதிகரித்துள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் தலைநகர் மொஸ்கோவில் புடினுக்கு எதிராக கண்டன பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடந்தது. அதில் சுமார் ஒரு இலட்சம் பேர் கலந்து கொண்டனர். புடின் இல்லாத ரஷ்யா வேண்டும். போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்தவர்களை விடுதலை செய் என்பன போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

பலர் கோரிக்கைகள் அடங்கிய பலூன்களையும் கோரிக்கை அட்டைகளையும் கையில் ஏந்தி வந்தனர். இந்த பேரணியில் ஏராளமானவர்கள் திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது. இந்த ஆண்டில் மட்டும் புடினுக்கு எதிராக இதுவரை 8 பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கைத்தொலைபேசி கொள்வனவின்போது தரம் குறித்து அவதானமாக இருங்கள்

## தொலைத்தொடர்புகள் ஆணைக்குழு பரிந்துரை

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசியை கொள்வனவு செய்யும் போது அதன் தரம் குறித்து கூடிய கவனம் செலுத்த வேண்டும் என தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

தரமற்ற கையடக்கத் தொலைபேசிகள் பல சட்டவிரோதமாக சந்தைப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனை தடுக்க தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வசமுள்ள அதிகாரம் வரையறுக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் அவதானமாக இருந்தால் தரக்குறைவான கையடக்கத் தொலைபேசி வியாபாரத்தை தடுக்க முடியும் என தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கையடக்கத் தொலைபேசி கொள்வனவு செய்யும் போது அதன் தரத்தை அறியும் முறை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வசமுள்ளது.

தொலைபேசியின் ஐஎம்ஐ இலக்கத்தை 1909 என்ற இலக்கத்திற்கு குறுந்தகவல் அனுப்புவதன் மூலம் அந்த கையடக்கத் தொலைபேசியின் தரம் குறித்து அறிந்து கொள்ள முடியும் என தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய தினத்தை சவாலாக எடுத்துக்கொள்ளும் போது நாளைய தினம் எளிதாக அமைகிறது.

*- கபீர்தாஸ்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ப.நோ.கூட்டுறவுச்சங்க மீள் எழுச்சிக்கு உதவுங்கள்

ப.நோ.கூட்டுறவுச் சங்கங்கள் எங்களுக்கு ஆற்றிய பணி குறித்தும், தமிழ் மக்களின் ஒற்றுமையில் அவற்றின் வகிபாகம் பற்றியும் அவை இன்று எதிர்நோக்கும் அவலநிலை குறித்தும் நேற்றைய தினம் இவ்விடத்தில் பிரஸ் தாபித்திருந்தோம்.

வடபகுதி தமிழ் மக்களின் அறிவுப்புலத்தை மடக்க வேண்டும் என்றால் நூலகத்தை தீயிட வேண்டும்.

தமிழ் மக்களின் ஒற்றுமையை வேரறுக்க வேண்டுமாயின் கூட்டுறவுச் சங்கங்களை எரியூட்ட வேண்டும் என்ற கோட்பாடு ஒரு காலத்தில் இந்த நாட்டின் ஆட்சியாளர்களிடம் இருந்தது என்பதை மறந்துவிட முடியாது.

அவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பதற்குள் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ் மக்களிடம் ஏற்படுத்திய ஒற்றுமை, அவர்களின் வாழ்வாதாரத்தில் ஆற்றிய உதவிகள் பெரிதுபட்டு நின்றன.

இவ்வாறான ப.நோ.கூட்டுறவுச்சங்கங்களின் இன்றைய அவல நிலையை எவரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

தமிழ் மக்களின் வாழ்வோடு கலந்து நின்ற ப.நோ.கூட்டுறவுச்சங்கங்கள் குறித்து தமிழ்ப் புத்தி ஜீவிகள் உள்ளிட்டோர் பாராமுகமாக இருப்பார் களாயின் அது நன்றி மறத்தலின் பாற்பட்டதாகும்.

எனவே ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களின் மீள் எழுச்சிக்கு உதவ புத்திஜீவிகளும் தொண்டு நிறுவனங்களும் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்வர வேண்டும்.

சமகால சூழ்நிலையில் தனியார் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் சிறப்பு சந்தைகளுடன் போட்டி போடுவது கடினமான விடயம் என்றால், ப.நோ. கூட்டுறவுச் சங்கங்களின் பணி நோக்கங்களை மாற்றம் செய்யவேண்டும்.

மிகப்பெரிய பண்ணைகளை அமைப்பது, உள்நாட்டு உற்பத்திகளைக் கொண்டு பதனிடல் உள்ளிட்ட உற்பத்தி முயற்சிகளை தொடங்குதல் வேண்டும்.

முகமாலை, பளை உள்ளிட்ட பிரதேசங்களில் இருக்கக் கூடிய அரச காணிகளை சங்கங்களுக்கு வழங்கி அவற்றின் மூலம் ஐம்பது ஏக்கரில் மாந்தோட்டம், இருப்பத்தைந்து ஏக்கரில் மாதுளம் பழத் தோட்டம், நாற்பது ஏக்கரில் தேசித் தோட்டம் என ஆரம்பிக்கும் நோக்கம் கொண்ட புதிய சிந்தனை எழுகை பெறவேண்டும்.

இதன் மூலம் ஏற்கெனவே இருந்த கூட்டுறவாளர்கள் தங்கள் நிர்வாகப் பணிகளை செய்து கொண்டிருக்க குறிப்பிட்ட செய்கைகளுக்காக புதியவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க முடியும்.

கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுபவர்களுக்கு குறைந்த ஊதியம் கொடுப்பது-அவர்களுக்கு கட்டாய ஓய்வு கொடுப்பது என்றிராமல் ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களை மீள் எழுச்சிக்கு உட்படுத்தி சாதனை படைப்போம்.

எங்கே! கூட்டுறவாளர்களின் குரல் ஓங்கி ஒலிக்கட்டும். புத்திஜீவிகளின் திட்டமிடல்கள் உதவட்டும்.

அரச, பொது அமைப்புகள் தாராளமாக நிதி உதவிகள் செய்யட்டும்.

# சம்பந்தன் என்ன சொன்னார்? மனோ கணேசன் விளக்கம்!

(கொழும்பு)

கிழக்கு மாகாண தேர்தலையடுத்து ஏற்பட்டுள்ள முறுகல் நிலை தொடர்பில், கூட்டமைப்பு நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் அக்கட்சியின் தலைவர் சம்பந்தன் எம்.பி.தெரிவித்த தேசிய அரசு என்ற கருத்தை அரசியல் ரீதியாக புரிந்து கொள்ள வேண்டும் என நான் நினைக்கின்றேன் என மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது.

சம்பந்தன் சிங்கள மொழியில் தெரிவித்த கருத்தை நான் தொலைக் காட்சியில் பார்த்து, கேட்டேன் அதில் எந்த முரண்பாட்டையும் நான் காணவில்லை. உண்மையில் இந்த அரசாங்கத்துடன் இணைந்து ஒரு கூட்டாட்சியை மாகாணத்திலோ அல்லது மத்தியிலோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைக்கும் என்று கூட்டமைப்பின் அரசியல் எதிரிகளும் கூட நம்ப மாட்டார்கள்.

உண்மையில் அங்கே சொல்லப்பட்ட கருத்து அத்தகைய ஒரு தேசிய அரசு யோசனை அரசின் உயர் தலைவரினால் நேரடியாக கூட்டமைப்புத் தலைவருக்கு முன்வைக்கப்படுமானால் அது தொடர்பில் தனது நிலைப்பாட்டை அரச தலைவருக்கு தாம் தெரிவிப்போம் என்றே கூட்டமைப்புத் தலைவர் சொன்னார் என நான் நினைக்கிறேன்.

அத்தகையதொரு சந்தர்ப்பம் ஏற்படுமானால் அரச அதிபரிடம் தான் என்ன சொல்லப் போகிறேன் என்பதையும் சுருக்கமாக ஊடகவியலாளரிடம் சம்பந்தன் தெரிவித்தார் என நான் நினைக்கிறேன்.

தாங்கள் முதல் அமைச்சர் பதவியையோ அமைச்சர் பதவியையோ எதிர்பார்த்து அரசியல் செய்யவில்லை என்றும் அவை பற்றி அரசு தலைவரிடம் பேசும் எண்ணம் தமக்கு இல்லையென்பதையும் சம்பந்தன் சிங்கள மொழியில் சொன்னதை நான் கேட்டேன்.

தமிழர்களின் அபிலாசைகளையும் இந்தக் கிழக்குத் தேர்தலில் அரசுக்கு எதிராகவே தமிழ் பேசும் மக்கள் வாக்களித்துள்ளார்கள் என்பதையும் அப்படியான சந்தர்ப்பத்தில் சம்பந்தன் அரசு தலைவருக்கு நேரடியாக சொல்ல நினைத்திருக்கலாம்.

எனவே இதை, ஏதோ அரசுடன் இணைந்து கூட்டாட்சியமைக்க கூட்டமைப்பு இணக்கம் தெரிவித்ததாக மிகைப்படுத்தி அபிப்பிராயம் தெரிவிப்பது முறையில்லை.



மேலும் இந்த அரசாங்கத்துடன் எப்போதும் பேச்சு வார்த்தை மூலமாக தீர்வு காண தயாராக இருக்கின்றோம் என்று நாட்டிற்கும் உலகத்திற்கும் தமிழ்த்தரப்பு தொடர்ந்து சமிக்ஞை காட்டிவரவேண்டும் என்பது எனது நிலைப்பாடாகும்.

அங்கேபோய் அடிப்படை நிலைப்பாடுகளை விட்டுக்கொடுக்காமல் என்ன பேசுகிறார்கள் என்பதைத்தான் நாம் கவனிக்க வேண்டுமே தவிர அறிவிப்புகளை வைத்துக் கொண்டு தீர்ப்பு வழங்கக் கூடாது என்றார். (எ-11)

# மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்து சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்தவேண்டும்

## இலங்கையை கோருகிறது சுவிஸ்

(கொழும்பு)

சுவிஸில் 26 மாநிலங்களும் சுயமாக அதிகாரங்களைக் கொண்டு தாமே நிர்வகிக்கும் சமஷ்டி ஆட்சிமுறை நடைமுறையில் உள்ளது. அதேபோன்று இலங்கையிலும் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து அவை தங்களைத் தாங்களே நிர்வகிக்கும் சமஷ்டி ஆட்சிமுறையை நடைமுறைக்கு கொண்டு வருவதே பொருத்தமானது.

இத்தகைய ஆட்சி முறையைக் கொண்டுவர சகல இனங்களும் பேச்சு நடத்த வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். இதனையே இலங்கைக்கு நாம் தெரிவித்து வருகின்றோம் என சுவிஸ் நாட்டின் அரசியல் விவகார அமைச்சைச் சேர்ந்த பொருளாதார அபிவிருத்தி அதிகாரி தமினானோ சுடே தமாத்தி தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோர் சர்வதேச தினத்தை முன்னிட்டு சுவிஸ் தலைநகர் பேர்னில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையில் போருக்குப் பின்னர் மீள்குடியமர்வு, அபிவிருத்தி என்பன முன்னெடுக்கப்படுகின்றன. சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம் அதற்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகின்றது. தற்சமயம் அங்குள்ள நிலைமை முன்னேற்றகரமாக இருப்பதாக எமது தூதரகம் ஊடாக நாம் அறிந்துள்ளோம்.

அந்த நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு உடன் இரண்டு விடயங்கள் பூர்த்தியாக வேண்டும். ஒன்று நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப் படுத்தி அந்த நாட்டில் நல்லிணக்கத்தை விரைவில் ஏற்படுத்த வேண்டும். அதற்குச் சகல இனங்களும் ஒன்றுபட்டு பேச்சு நடத்தவேண்டும்.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சுக்களில் ஏற்பட்ட தேக்கநிலை நீக்கப்பட்டு விரைவாக பேச்சு நடத்தவேண்டும். இந்தப் பேச்சுக்களில் சகல இனங்களும் பங்கு பெற வேண்டும்.

இரண்டாவது மனித உரிமைநிலைமை மேம்பட வேண்டும். மனித உரிமை நிலைமையை மேம்படுத்த நல்லிணக்க ஆணைக் குழு தெரிவித்த சிபாரிசுகள் விரைவில் நடைமுறைக்கு வரவேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவால் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவால் கொண்டு வரப்பட்ட விசாரணைக்கு சுவிஸ் ஆதரவு வழங்கியது. அதன்மூலம் சுவிஸின் நிலைப்பாட்டை இலங்கைக்கு தெரிவித்தோம்.

எமது தூதரகம் மூலமும் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு மூலமும் எமது நிலைப்பாட்டை இலங்கைக்கு தெரியப்படுத்தி வருகிறோம். இலங்கை விரைந்து செயற்பட்டு நல்லிணக்கத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதே எமது விருப்பம்.

இலங்கைநிலைவரங்களைமதிப்பீடுசெய்ய ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவின் அதிகாரிகள் குழு இலங்கைக்கு செல்வதை நாம் வரவேற்கின்றோம் என்றார். (அ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## ஆன்மீக எழுச்சி ஏற்படட்டும்



அன்பு,இரக்கம் இவற்றைச் செயற்படுத்த வாய்ப்பு அளித்த இறைவனை துதிப்பதுடன் உதவி செய்தவர்களை இறைவனாக எண்ணவேண்டும்.

இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகியவை நமக்குத் தேவை.

மனிதப்பிறவி ஞானமும் பக்தியும் அடைவதற்காக உருவாக்கப்பட்டுள்ளதால் ஆன்மீக பலத்தால் மட்டும் இந்தியா எழுச்சி பெறப்போகிறது.

உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகாமல் தைரியத்துடன் வீரனாகத் திகழவேண்டும்.

இந்தியாவில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் முதலில் ஆன்மீக எழுச்சி உண்டாக வேண்டும். அரசியல் கருத்துக்களை பரவுவதற்கு முன்னால் நாட்டை ஆன்மீக வெள்ளத்தில் மூழ்கடிக்க வேண்டும்.

தன்னலம் இல்லாமல் நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.

பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வவுனியா பிறீமியர் லீக் கிரிக்கெட் போட்டி; யுனிபைட், செவ்வானம் அணிகள் வெற்றி

(வேலணை)

வவுனியாவில் செவ்வானம் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் வவுனியா பிறீமியர் லீக் போட்டிகளில் கடந்த வாரப் போட்டிகளில் யுனிபைட் விளையாட்டுக் கழகம், செவ்வானம் விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றி பெற்றுள்ளன.

யுனிபைட் கழகத்திற்கும் தமிழ் யூனியன் கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யுனிபைட் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 18 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் யுனிபைட் கழகம் சார்பாக மயூரன் 41 பந்துகளில் 63 ஓட்டங்களையும் நிமலேஸ் 22 பந்துகளில் 34 ஓட்டங்களையும் கஜன் 18 பந்துகளில் 26 ஓட்டங்களையும் பெற்ற அதேவேளை பந்து வீச்சில் தமிழ் யூனியன் கழகம் சார்பாக நிரஞ்சன் 4 ஓவர்களில் 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கிரி 3 ஓவர்களில் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

165 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தமிழ் யூனியுன் கழகம் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் தமிழ் யூனியன் கழகம் சார்பாக ஜெசி 37 பந்துகளில் 53 ஓட்டங்களையும் சொரூபன் 16 பந்துகளில் 26 ஓட்டங்களையும் பெற்ற அதேவேளை பந்து வீச்சில் யுனிபைட் கழகம் சார்பாக மயூரன், பகீரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக 63 ஓட்டங்களையும் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றிய யுனிபைட் விளையாட்டுக் கழகத்தின் மயூரன் தெரிவானார்.

செவ்வானம் விளையாட்டுக் கழகத்திற்கும் கலைமகள் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய செவ்வானம் விளையாட்டுக் கழகம் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் செவ்வானம் விளையாட்டுக் கழகம் சார்பாக றேகன் 28 பந்துகளில் 29 ஓட்டங்களையும் சிவானந்தன் 15 பந்துகளில் 14 ஓட்டங்களையும் பெற்ற அதேவேளை கலைமகள் விளையாட்டுக்கழகம் சார்பாக பந்துவீச்சில் நிசாந்தன் 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் இருதயராஜ் 19 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். 105 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கலைமகள் விளையாட்டுக் கழகம் 19.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்று 7ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் கலைமகள் விளையாட்டுக் கழகம் சார்பாக ரவிராஜ் 34 பந்துகளில் 18 ஓட்டங்களையும் ஜெகன் 10 பந்துகளில் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் செவ்வானம் விளையாட்டுக் கழகம் சார்பாக சிவானந்தன் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சிவாசலிஸ் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சுரேன் 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றிய அதேவேளை போட்டியின் நாயகனாக செவ்வானம் விளையாட்டுக் கழகம் சார்பாக சகலதுறைப் பெறுபேறுகளை வெளிப்படுத்திய சிவானந்தன் தெரிவானார்.

vpl
Vavuniya
Premier League

# விளையாட்டுவிழா

தென்மராட்சி கல்வி வலய விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கைதடி நவீல்ட் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் தலைமையில் நடைபெறும் விளையாட்டு விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ். கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ. இரவீந்திரனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண துடுப்பாட்ட பயிற்சி ஆலோசகர் வீ.கே. சண்முகலிங்கமும் கலந்து கொள்வர்.

# ஜிம்னாஸ்டிக் போட்டிகள்

அகில இலங்கை ரீதியாக மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான ஜிம்னாஸ்டிக் ,அரேபிக் ஜிம்னாஸ்டிக் போட்டிகள் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இப் போட்டிகளில் வடமாகாண பாடசாலை அணிகள் கலந்து கொள்ளவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# நியூ ஸ்ரார் பிறீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி; திருநெல்வேலி மத்தி, ஜொனியன்ஸ், கிறாஸ் கோப்பர்ஸ் வெற்றி








(வேலணை)

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் நியூஸ்ரார் பிறீமியர் லீக்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற போட்டிகளில் திருநெல்வேலி மத்தி வி.க., ஜொனியன்ஸ் வி.க., கிறாஸ் கோப்பர்ஸ் வி.க. வெற்றி பெற்றுள்ளன.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமான முதல் போட்டியில் திருநெல்வேலி மத்திய விளையாட்டுக்கழகமும் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக்கழகமும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி இருபது ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் நிஷாந்தன் 29, ராசேந்திரம் 24, சுதா 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பாலமுரளி 2, சிவராஜா 2 விக்கெட்டைக் கைப்பற்றினர். 147 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி மத்திய அணி 19.2 ஓவர்களில் 9 விக்கெட்டை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்று ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்றனர். துடுப்பாட்டத்தில் லவகாந்த் 32, சிவராஜா ஆட்டமிழக்காமல் 23, ரஜிந்தன் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அனோஜன் 3, நிஷாந்தன் 2 இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக திருநெல்வேலி மத்திய அணியின் சிவராஜா தெரிவு செய்யப்பட்டார். 11.30 மணிக்கு நடைபெற்ற இரண்டாவது போட்டியில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகமும் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகமும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அன்புஜன் 55, காண்டீபன் 47, விதுஷன் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் உதயா 2, குணா 1, சுரேஸ் 1 இலக்குகளையும் கைப்பற்றினர். 213 என்ற இமாலய இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி 20 ஓவர்களில் 8 விக்கெட்டை இழந்து 175 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 37 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் சுதர்சன் அதிரடியாக ஆடி 90 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் விதுசன் 3, மயூரன் 2 இலக்குகளை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ஜொனியன்ஸ் அணியின் விதுஷன் தெரிவானார். 2.30 மணிக்கு ஆரம்பமான மூன்றாவது போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கிறாஸ் கோப்பர்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் கிறாஸ் கோப்பர்ஸ் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 18.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 96 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜனார்த்தனன் 18, உமாகரன் 178 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் ரவிசங்கர், கோகிலன் தலா மூன்று விக்கெட்டை கைப்பற்றினர். 97 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கோப்பர்ஸ் ஆறுதலாக ஓட்டங்களை பெற்ற போதும் சீரான இடைவெளியில் விக்கெட்டை இழந்து வந்தது.

இறுதியில் 18.3 ஓவர்களில் 8 விக்கெட்டை இழந்து 100 ஓட்டங்க்ளைப் பெற்று இரண்டு விக்கெட்டினால் வெற்றி பெற்றனர். துடுப்பாட்டத்தில் காந்தசீலன் 35, கோகிலன் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சஞ்சித் 2, மணிவண்ணன் 2 விக்கெட்டையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக கிறாஸ்கோப்பர்ஸ் அணியின் காந்தசீலன் தெரிவு செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து பிரிமியர் லீக் கால்பந்து

# ஆர்சனல், மன்செஸ்ரர் வெற்றி

இங்கிலாந்து பிரிமியர் லீக் கால்பந்து தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ஆர்சனல், மன்செஸ்ரர் யுனைட்டட் அணிகள் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுக்கொண்டதோடு அஸ்ரன் வில்லா, ஸ்ரீபுல்ஹாம் போன்ற அணிகள் வெற்றியைப் பெற்றுக்கொண்டன.

நோர்விச் அணிக்கும் வெஸ்றகாம் யுனைட்டட் அணிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் இரண்டு அணிகளும் கோல்கள் எதனையும் பெற்றுக்கொள்ளாமல் விட போட்டி 0:0 என்ற கணக்கில் சமனிலையில் நிறைபடைந்தது.

ஆர்சனலுக்கும் சௌத்தம்டனுக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் ஆர்சனல் அணி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

போட்டி ஆரம்பித்து 11ஆவது நிமிடத்திலேயே முதலாவது கோலை பெற்றுக் கொண்ட அவ் அணி, முதல் பாதியில் 4 கோல்களைப் பெற்றக் கொண்டது. சௌத்தம்டன் அணி ஒரு கோலைப் பெற்றுக்கொண்டிருந்தது.

இரண்டாவது பாதியில் ஆர்சனல் அணி இரண்டு மேலதிக கோல்களைப் பெற்றுக் கொள்ள ஆர்சனல் அணி 6:1 என்ற கணக்கில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

அஸ்ரன் வில்லா அணிக்கும் ஸ்வன்சீ



அணிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் அஸ்ரன் வில்லா அணி வெற்றிபெற்றது.

போட்டி ஆரம்பித்து 16ஆவது நிமிடத்திலேயே முதலாவது கோலைப் பெற்றுக் கொண்ட அஸ்ரன் வில்லா 88ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலைப் பெற்றுக் கொண்டது.

ஸ்வன்சீ அணி கோல் எதனையும் பெற்றுக்கொள்ளாதுவிட போட்டியில் அஸ்ரன் வில்லா 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றுக் கொண்டது.

ஸ்ரீபுல்ஹாம் அணிக்கும் வெஸ்ட் ப்ரோம்விச் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் ஸ்ரீபுல்ஹாம் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

போட்டியின் 32ஆவது நிமிடத்திலேயே அவ் அணி கோல் ஒன்றைப் பெற்றுக்கொண்டதுடன், போட்டியின் 38ஆவது நிமிடத்தில் வெஸ்ட் ப்ரோம்விச் அணியின் ஒடெம்விங்கி சிகப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட ப்ரோம்பிச் அணி 10 வீரர்களுடன் விளையாடவேண்டிஏற்பட்டது. இறுதியில் ஸ்ரீபுல்ஹாம் அணி 3:0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

மன்செஸ்ரர் யுனைட்டட் அணிக்கும் விகான் அத்லட்டிக் அணிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் மன்செஸ்ரர் யுனைட்டட் அணி இலகுவான வெற்றியைப் பெற்றது.

போட்டியின் 6ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை அவ் அணி தவறவிட்டதோடு, முதற்பாதியில் இரண்டு அணிகளும் கோல் எதனையும் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

ஆனால் இரண்டாவது பாதி ஆரம்பித்தது முதல் அதிரடியாக விளையாடிய மன்செஸ்ரர் யுனைட்டட் 4 கோல்களை இரண்டாவது பாதியில் பெற்றுக் கொண்டது. இதன் காரணமாக போட்டியை 4:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

## அரையிறுதி கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியும் யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரியும் அரையிறுதிப் போட்டியில் மோதவுள்ளன.

19 வயது பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான அரையிறுதி கிரிக்கெட் போட்டி இன்று காலை களுத்துறை தேசிய கல்வியியற் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப் போட்டியில் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதவுள்ளது.

## முதலமைச்சர் தெரிவு...

விருப்பு வாக்கு, அனுபவம், இன விகிதாசாரம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் பதவிகள் வழங்கப்பட உள்ளதாக கட்சித்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, முதலமைச்சர் தெரிவு தொடர்பான பிரச்சினைக்கு ஜனாதிபதி தலைமையில் தீர்வு காணப்படுமென திவயின பத்திரிகையில் செய்தி வெளியிடப் பட்டுள்ளது.

குறிப்பாக கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண சபைக்கான முதலமைச்சர் தொடர்பிலான சர்ச்சைக்கு ஜனாதிபதியின் தலைமையிலான கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர்கள் தீர்வு வழங்க உள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (எ-11)

## வேலணையில்...

இந்தச்சடலமும் முற்றாக உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றது.


சடலத்தின் தலைப்பகுதி முற்றாக உருக்குலைந்துள்ளது. மேலும் சடலத்தில் கறுப்பு நிறத்திலான உள்ளாடையொன்று காணப்படுகின்றது.

தற்போது சடலத்தை ஊர்காவற்றுறைப் பொலிஸார் மீட்டுள்ளதோடு, இந்த விடயம் குறித்த விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை யாழில் இருந்து சென்ற மீன்பிடி படகுகளுக்கோ, மீனவர்களுக்கோ எந்த அபாயமும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் கரையொதுங்கியுள்ள சடலங்கள் குறித்து பலத்த கேள்விகள் எழுந்துள்ளன. (எ-11)

# இலங்கை அணியால் உலகக் கிண்ணத்தை வெற்றிபெற முடியும் - மஹேல ஜெயவர்த்தன



உலக இருபது-20 தொடரை வெற்றிகொள்வதற்கான அத்தனையும் இலங்கை அணியிடம் உள்ளதாக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியால் உலக இருபது-20 தொடரை வெற்றிகொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 15, 20 வருடங்களாக இலங்கை அணியைப் பொறுத்தவரை மிகப்பெரிய தொடர்களில் பங்குபற்றும் போது மிகச்சிறப்பாகச் செயற்படும் இயல்பு காணப்படுவதாகத் தெரிவித்த மஹேல ஜெயவர்த்தன அந்த இயல்பு இலங்கை அணியிடம் இயல்பாக ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பொதுவாக அணிகளிடம் இந்த இயல்பு ஏற்படுத்தப்படுவது கடினமானது எனத் தெரிவித்த மஹேல ஜெயவர்த்தன. அவ்வியல்பு இலங்கை அணியிடம் சிறப்பாகக் காணப்படுவதாகவும், அதன் காரணமாக சர்வதேசக் கிரிக்கெட் சபையின் பன்னாட்டுத் தொடர்களில் இலங்கை அணி கடந்த காலங்களில் சிறப்பாகச் செயற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கை அணி உலக இருபது-20 தொடரை வெற்றிகொள்ளும் என்பதற்காக எந்த உத்தரவாதமும் கிடையாது எனத் தெரிவித்த மஹேல ஜெயவர்த்தன, ஆனால் இலங்கை அணியின் கடந்த காலச் சிறப்பாக திறமை வெளிப்பாடுகள் அதிக தன்னம்பிக்கையை வழங்குதாகத் தெரிவித்தார்.

இலங்கை அணியிலுள்ள அனைத்து வீரர்களிடமும் இத் தொடரில் இலங்கை அணி சிறப்பாகச் செயற்படும் என்ற நம்பிக்கை காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய இலங்கை அணி, 2002 ஆம் ஆண்டுசம்பியன்ஸ்கிண்ணத்தொடரில் இணை சம்பின்களாகத் தெரிவாகியது. அதைத் தவிர 2007, 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணங்களில் இரண்டாமிடம் பெற்றதோடு, 2009 ஆம் ஆண்டுஉலக இருபது-20தொடரிலும் இரண்டாமிடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை அழைத்தே...

பேரவையிடம் அழைப்பு விடுத்தது. அதனையடுத்தே அவர்களது விஜயம் அமைந்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான கொள்கைகள் தொடர்பாக இந்தக் குழுவினர் இலங்கை அரசாங்கத்திற்கு பல்வேறு விடயங்களில் ஒத்துழைப்புக்களை வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் பரிந்துரைகளை வழங்கி இலங்கைக்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவார்கள். எவ்வாறாயினும் இறுதிக்கட்டப் போரின்போது, மனித உரிமைப் பேரவையின் குழுவின் இலங்கை செல்வது சம்பந்தமாக ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தின் அமைச்சர்கள் பல்வேறு எதிர்ப்புக்களை வெளியிட்டு வந்தனர்.

ஆனால் தற்போது எமது நாட்டின் பிரச்சினையை நாங்கள் தீர்த்துக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எமது நாட்டின் பிரச்சினையில் எவரும் தலையிடக்கூடாது. எம் மீது போர்க் குற்றங்களை சுமத்த முயற்சிக்கின்றனர். ஜனாதிபதியை மின்சார நாற்காலிக்கு கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர் என அரசாங்கத் தரப்பு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னர் ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட பரிந்துரைக்கு அமையவே ஐ.நா பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் அவர்களது வரவை இலங்கையில் பலர் எதிர்த்தனர். பின்னர் அவர்களது வருகைக்கு சம்மதம் தெரிவித்து அவர்களை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்தனர். அதன்படி அவர்கள் தற்போது இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## இந்தியாவுடன் யுத்தம்...

வார்த்தைகள் மிகத் தீவிரமான வகையில் வெளிடப்பட்டன. அவை அவரை இறங்கிவரச் செய்தன. அவரை நான் கூர்ந்து அவதானித்தேன். இவ்வாறான பதிலை அவர் எதிர்பார்க்கவில்லை. அவர் அதிர்ச்சியடைந்தவராக காணப்பட்டார். ஒன்று அல்லது இரு நிமிடங்கள் அவரால் பேசமுடியவில்லை எனவும் மெஹ்ரோத்ரா தெரிவித்துள்ளார்.

மெஹ்ரோத்ரா அமைதியடைய வேண்டுமென அப்போதைய பாதுகாப்பு அமைச்சரான ரஞ்சன் விஜேரட்ன உட்பட இலங்கையின் ஏனைய தலைவர்கள் கூறியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னர் ஒரு கட்டத்தில் இந்திய அமைதி காக்கும் படையை ஆக்கிரமிப்பு படையாக தான் பிரகடனப்படுத்தப் போவதாகவும் அது புதுடில்லியின் புகழுக்கு பங்கம் ஏற்படுத்தும் என பிரேமதாஸ கூறியதாக மெஹ்ரோத்ரா கூறியுள்ளார்.

எமது புகழை நாம் கவனித்துக்கொள்வோம் என தான் பதிலளித்ததாகவும் மெஹ்ரோத்ரா கூறியுள்ளார். அப்போது ஜனாதிபதி பிரேமதாஸ அது எனது அரசியல் எதிர்காலத்தை அழிக்கும். உங்கள் அடுத்த விஜயம் எனது இறுதிச் சடங்கிற்கானதாக இருக்கும் என கோபமாக கூறியதாக தெரிவித்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரட்சியால் வாடும் கால்நடைகளுக்கு குடிநீர் வழங்க முன்வாருங்கள்

## யாழ்.வணிகர் கழகம் அவசர வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தீவகம் உள்ளிட்ட யாழ்.குடாநாட்டில் வரட்சியால் வாடும் கால்நடைகளுக்கு தேவையான குடிநீரை வழங்க யாழ்.அரச அதிபர் மற்றும் பிரதேச சபைகள், பிரதேச செயலகங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்ப்பாண வணிகர் கழகத்தலைவர் ஆர்.ஜெயசேகரம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடும் வரட்சியால் கால்நடைகள் உயிரிழக்கும் துயரச் சம்பவங்களை தடுப்பதில் பாராளுமன்ற உறுப்பினர்களும் உதவ முன்வர வேண்டும்.

இதேவேளை, கால்நடைகளுக்கு குடிநீர் விநியோகிக்கும் நடைமுறைகளை அமுல்படுத்தினால் யாழ்ப்பாண வணிகர் கழகம் அதற்கு உதவத் தயாராக இருப்பதாகவும் அதன் தலைவர் ஜெயசேகரம் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

# தேசிய அரசுக்கு...

இதேவேளை, கிழக்கு மாகாண சபைக்கான முதலமைச்சர் பதவியை இரண்டு ஆண்டுகளுக்கு தமிழர் ஒருவருக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு முஸ்லிம் ஒருவருக்கும் ஓராண்டுக்கு சிங்களவர் ஒருவருக்கும் வழங்க வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

கிழக்கு மாகாண சபையில் ஐக்கிய தேசியக் கட்சி நான்கு ஆசனங்களையே கைப்பற்றியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அரச கூட்டணியை எதிர்த்து போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் முஸ்லிம் காங்கிரஸுடன் சேர்ந்து ஆட்சியமைக்கப் போவதாக ஆளுநருக்கு தேர்தல் முடிபுகள் வெளியானவுடனேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துவிட்டது.

இதற்கிடையில் அரச கூட்டணியும் கிழக்கில் தமது ஆட்சியே அமையும் என்று பின்னர் அறிவித்தது.

ஆனாலும் ஒருவாரத்துக்கும் கூடுதலாக அரசுடன் பேச்சு நடத்திவருவதாக கூறிவருகின்ற முஸ்லிம் காங்கிரஸ் இன்னும் உறுதியான முடிபு எதனையும் அறிவித்தபாடில்லை.

இந்த நிலையில் தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றி ஜனாதிபதி அழைத்தால் அதுபற்றி பேசிப்பார்க்கலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் நேற்று பதிலளித்திருந்த நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் மேற்படி அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# மக்களை ஏமாற்...

மின்சாரமோ இரவு 8 மணிக்குப் பின்பே தரப்படுகிறது என பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

8 மணிக்கு வழங்கப்படும் மின்சாரமும் 10 மணியாவதற்கு முன்னர் சுமார் 4 அல்லது 5 தடவைகள் தடைப்பட்டே வரும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதுகுறித்து எவரும் கண்டுகொள்வதில்லை எனவும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (எ-11)

# கிழக்கு மாகாண கூட்...

கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையே நேற்றுக் காலை திடீர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுமந்திரன் ஆகியோரும் முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பசீர் சேகுதாவூத், செயலாளர் எம்.ரி.ஹசன் அலி, ஹரிஸ் ஆகிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டத்தரணி நிசாம் காரியப்பர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்புத் தொடர்பில் இரா.சம்பந்தன் தெரிவித்ததாவது;

கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைக்க முடியாத நிலையில் இப்போது அனைத்துக் கட்சிகளும் உள்ளன.

தேர்தல் சுதந்திரமாகவும் உண்மையாகவும் நேர்மையாகவும் நடைபெற்றிருந்தால் பெறுபேறு வேறுமாதிரியாக அமைந்திருக்கும்.

தேர்தல் உண்மையாக நடைபெற்றிருந்தால் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தன் வெற்றி பெற்றிருக்க முடியாது என்பது பொதுவான கருத்து.

தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்தார்கள்.

முஸ்லிம் மக்கள் கூடுதலாக முஸ்லிம் காங்கிரஸை ஆதரித்தார்கள்.

எங்களுடைய தேர்தல் பிரசாரத்தின் அடிப்படையில் எங்களுடைய இருகட்சிகளும் ஆளும் கட்சியினை எதிர்த்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து கிழக்கு மாகாண ஆட்சியை பொறுப்பேற்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் தமது வாக்கினை மக்கள் வழங்கி யிருக்கின்றார்கள்.

தேர்தல் முடிந்த பிறகு மக்கள் மிகவும் கூடுதலாக சிறந்த ஆட்சி இடம்பெற வேண் டும் என்று பகிரங்கமாகக் கூறிவந்திருக்கிறார்கள்.

ஆனால் அரசாங்கம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஆதரவுடன் ஆட்சி அமைக்க முயற்சி எடுத்து வருகிறது.

எங்களுக்கும் முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையில் நேற்றுக் காலை பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் ஏனைய முஸ்லிம் தலைவர்களுடனும் பேசினோம். முழுமையாக நாங்கள் பேசினோம்.

மக்களுடைய நிலைமை பற்றியும் மக்களின் எதிர்பார்ப்பையும் தெளிவாக விளக்கினோம்.

இதேவேளை தாங்களும் அரசுடன் பேசிய போதும் இன்னமும் ஒரு முடிபுக்கு வரவில்லை என ஹக்கீமும் கூறினார்.

மீண்டும் எம்முடன் பேசுவதாகக் கூறினார். பேச்சு திருப்திகரமாக முடிந்தது.

மக்கள் பொறுமையாக இருக்க வேண்டிய நேரம் இது. நாங்கள் தேர்தலின்போதும் சொன்னோம்;இப்போதும் சொல்கிறோம்; ஒரு முஸ்லிம் முதலமைச்சரை நாங்கள் ஏற்கத் தயார். முஸ்லிம் மக்கள் நாங்கள் இருவரும் கூட்டாட்சி ஏற்படுத்துவோம் என நம்பியே வாக்களித்துள்ளார்கள்.

எனவே அதனை நாம் காப்பாற்ற வேண்டும்.

தலைவர் ஹக்கீம் அவர்கள் எங்களுக்கு ஆதரவு தரமாட்டார் என்றோ, அரசுக்கு ஆதரவு கொடுப்பதாகவோ எதனையும் சொல்லவில்லை.

இதுதொடர்பில் தமது கட்சி சந்தர்ப்பவாத அரசியல் எதுவும் செய்யாது என்றும் மக்களின் நலன்களை மனத்தில் வைத்தே எந்தவொரு முடிபையும் எடுக்கும் என ஹக்கீம் சொன்னார் என சம்பந்தன் கூறியுள்ளார். (எ-11)

IDM Chankanai Campus
IDM சங்கானையின்
Challenger Trophy 2012
இணையத்தள வடிவமைப்பு
திறந்த போட்டி
முதலாம் பரிசு Rs:15000/= + Challenger Trophy
2ம் பரிசு Rs.10000/=
3ம் பரிசு Rs.5000/=
Valuable Scholarships
பங்குபெற பரிசில் பெற நீங்கள் செய்யவேண்டியது பின்வரும் கூப்பனை நிரப்பி கத்தரித்து IDM Chankanai Campus -Luxmy Plaza Main Street Chankanai எனும் முகவரிக்கு 25-09-2012 க்கு முன்பதாக அனுப்பிவைக்கவும்
ஆர்வமுள்ள எவரும் பங்குபெறலாம்
முழுப்பெயர்: ..................
முகவரி : ..................
தொ.பே இல: ..................
(ச-1055)

O/L வரை படிக்காவிட்டால்?... A/L ல் தேறாவிட்டால்..?
பல்கலைக்கழக அனுமதி கிடைக்காவிட்டால்?
என்ன செய்வது?
என்ன படிப்பது? எங்கே படிப்பது?
இதோ!
உங்களுக்கு வழிகாட்ட வருகிறது!
15 தேசிய பல்கலைக்கழகங்கள், 150க்கும் மேற்பட்ட அரச, தனியார் உயர்கல்வி, தொழிற்கல்வி நிறுவனங்கள்,
500க்கும் மேற்பட்ட உயர்கல்வி, தொழிற்கல்வி வாய்ப்புக்கள், வெளிநாட்டுக்கல்வி தொடர்பான விபரங்கள், வழிகாட்டி ஆலோசனைகளுடன்....
இலங்கையின் முதலாவது
தமிழ்மொழியிலான
கல்வி வழிகாட்டி & விபரக்கொத்து
(Education Guide & Directory)
சிகரம்
கல்வி - தொழில் வழிகாட்டி
நூல் வெளியீடு & கல்வி வழிகாட்டி கருத்தரங்கு
நிபுணத்துவ வளவாளர்கள்:
வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
பேராசிரியர் மா.சின்னத்தம்பி
யாழ் தேசிய கல்வியியல் கல்லூரி இணைப்பாளர்
பா.தனபாலன்
சிகரம் ஊடக இல்லப் பணிப்பாளர் கோ.றுஷாங்கன்
செப்டெம்பர் 18ம் திகதி காலை 9 - மாலை 5 மணி
@ஞானம்ஸ் ஹொட்டேல், யாழ்ப்பாணம்
ஒரு தீபத்திலிருந்து ஓராயிரம் தீபங்களை ஏற்றிவைக்க வாரீர்!
EDUCATION
சிகரம் கல்வி வழிகாட்டி சேவை
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
021 300 80 60 நேரடி: 0773 616 798
Email: edusikaram@gmail.com Web: www.sikaram.lk
(ச-1072)

சிகரம்
கல்வி - தொழில் வழிகாட்டி
நூல் வெளியீடு & கல்வி வழிகாட்டி கருத்தரங்கு மற்றும்
விசா கெடுபிடி IELTS வங்கிப்பணம்
சிக்கல்கள் எதுவுமின்றி
UK Australia New Zealand Canada America Malaysia
பட்டக்கல்விகளை வழங்கும் 7 பல்கலைக்கழகங்கள் பங்கேற்கும்
INTI International University | SUNWAY University | The University of Nottingham | SEGi University College | Manipal | MAHSA University College
கல்விக் கண்காட்சி
Certificate - Diploma - Foundation - Bachelors - Masters - PhD Programs
பல்கலைக்கழக பிரதிநிதிகளை நேரில் சந்தித்து உங்கள் வெளிநாட்டுக் கனவை நனவாக்க வாருங்கள்
செப்டெம்பர் 18, 19ம் திகதிகளில் காலை 9 - மாலை 5 மணி
@ஞானம்ஸ் ஹொட்டேல், யாழ்ப்பாணம்
2012 ஒகஸ்ட்டில் 15 மாணவர்கள் பயணமாகியுள்ளனர் நீங்களும் இணைந்துகொள்ள அழையுங்கள்!

70% கட்டணக்கழிவு
வங்கிக்கடன் வசதி
Supported and Endorsed by:
Ministry of Higher Education, Malaysia
High Commission of Malaysia
EDUCATION
சிகரம் கல்வி வழிகாட்டி சேவை
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
021 300 80 60 நேரடி: 0773 616 798
Email: edusikaram@gmail.com Web: www.sikaram.lk
(ச-1072)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org